Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | செவ்வாய்க்கிழமை | வைகாசி 10 ஆம் நாள் | பக்கங்கள்: 16
கதிர் : 179 | 24 மே 2022 | வள்ளுவர் ஆண்டு 2053 | விலை : ரூ. 50

# ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா பத்துக் கிலோ அரிசி

கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார், 5வயதுக்குட்பட்ட குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு ஒரு கிலோ பால்மா

மாவட்டங்களுக்கான பட்டியல் இன்று இறுதியானதும் உடனடியாக விநியோகம் ஆரம்பம்

கொழும்பு, மே 24

தமிழக அரசின் நன்கொடையில் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள அரிசி மற்றும் பால்மா என்பனவற்றை இன்று மாலையிலிருந்து அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பும் செயன்முறை ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆரம்பத்தில் வறுமை நிலையிலுள்ள ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா 20 கிலோ அரிசி வீதம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தாலும் அந்தமுடிவு மாற்றப்பட்டு அனைத்துக் குடும்பங்களுக்கும் தலா 10 கிலோ அரிசி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

15 ➤




## அத்தியாவசியப் பணியாளர்களை மாத்திரம் கடமைக்கு அழைக்குக!

சுற்றறிக்கை இன்று வெளியாகும்

கொழும்பு, மே 24

அரச சேவையின் அத்தியாவசியக் கடமைகளுக்குத் தேவைப்படும் ஊழியர்களை மாத்திரம் அழைப்

15 ➤

21ஆம் திருத்தச் சட்டவரைவு

## கட்சித்தலைவர்களின் யோசனைகளை உள்வாங்கி மீளவும் அமைச்சரவைக்கு

நேற்றைய கூட்டத்தில் முடிவு

கொழும்பு, மே 24

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களின் யோசனைகளையும் உள்வாங்கி திருத்தப்பட்ட 21ஆம் திருத்தச் சட்டவரைவை அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் மீளவும் முன்வைப்பதற்கு நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

15 ➤

## எரிபொருள் விலை அதிகரிக்கப்படவில்லை

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் விலைகளை அதிகரிக்கவுள்ளதாக கொழும்பு ஊடகங்கள் சில செய்திகள் வெளியிட்டபோதும், இந்தச் செய்தி அச்சுக்குப் போகும் வரையில் அவ்வாறானதொரு உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை. ஒக்ரேன் 92 ரக பெற்றோல் 82 ரூபாவால் அதிகரித்து புதிய விற்பனை விலை 420 ரூபாவாகவும், ஒக்ரேன் 95 ரக பெற்றோல் 87 ரூபாவால் அதிகரித்து புதிய விற்பனை விலை 450 ரூபாவாகவும், ஒட்டோ டீசல் 111 ரூபா அதிகரித்து புதிய விற்பனை விலை 400 ரூபாவாகவும், சுப்பர் டீசல் 116 ரூபா அதிகரித்து விற்பனை விலை 445 ரூபாவாகவும் அதிகரிக்கப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5)




"அப்ப அநாவசியப் பணியாளர்களும் நிறையப்பேர் கோர்ணமெந்தில கோழி மேய்ச்சுக் கொண்டு இருக்கினம் போல...!"

## ரணிலின் அரசாங்கத்திலும் அமைச்சரானார் டக்ளஸ்

நேற்று 6 பேர் பதவியேற்பு

கொழும்பு, மே 24

ரணில் அரசாங்கத்தில் முதல் தடவையாக அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்றுள்ளார் ஈ.பி.டி.பி. செயலர்

14 ➤

## சி.ஐ.டி. பிரதானி நேற்று இடமாற்றம்

கொழும்பு, மே 24

மே 9 வன்முறைகள் தொடர்பான விசாரணைகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அதன் பிரதானி திலகரத்ன

15 ➤

## தாக்குதலை தடுக்கவேண்டாமென நான் ஒருபோதும் பணிக்கவில்லை!

சி.ஐ.டிக்கு வாக்குமூலம் வழங்கிவிட்டு பதவியைத் துறந்தார் ஜகத் அல்விஸ்

கொழும்பு, மே 24

மே 9 ஆம் திகதி எந்தவொரு வன்முறையையும் தடுக்கவேண்டாம் என்று நான் பணிக்கவில்லை என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் மேஜர் ஜெனரல்

15 ➤

## 2 எரிவாயு கப்பல்களுக்கு கொடுப்பனவு பூர்த்தி!

ஆனாலும் இன்று சிலிண்டர் கிடைக்காது

பக்.15 ➤

## 40ஆயிரம் மெற்றிக்தொன் பெற்றோல் வந்தடைந்தது

பக்.14 ➤

## பவுஸர்கள் மறிப்பு சிலாபத்தில் பதற்றம்

பக்.14 ➤

## பாதுகாப்புக் கருதி எரிபொருள் விநியோகத்தை தற்காலிகமாக நிறுத்துங்கள்

நிரப்பு நிலையங்கள் கோரிக்கை

பக்.14 ➤

## எரிபொருள் பதுக்கியவர் பலாலியில் கைது

பக்.15 ➤

அடுத்த வாரம் அத்தியாவசியப் பொருள்களுக்கான

## நெருக்கடிகள் குறையலாம்!

மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

பக்.15 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சித் தீர்மானத்தை மீறினால் நடவடிக்கை

## சுதந்திரக் கட்சி எச்சரிக்கை

கொழும்பு, மே 24

**சர்வகட்சி அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளைப் பெறுவதில்லை என்ற கட்சியின் தீர்மானத்தை மீறும் அனைத்து உறுப்பினர்களுக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என சுதந்திரக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.**

கட்சி உறுப்பினர்கள் பலர் ஏற்கனவே அமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொண்டுள்ளனர் என்றும், எதிர்காலத்தில் அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொள்ளும் உறுப்பினர்கள் கட்சியின் தீர்மானத்தை மீறியதாக அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கட்சியின் சிரேஷ்ட பிரதித் தலைவர் பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது, தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள், உரம், மருந்து, எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு சர்வகட்சி அரசாங்கம் நியமிக்கப்படும். அதனால் இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் பதவிகள் அவசியமில்லை. அப்படி இல்லாமல் அதிக எண்ணிக்கையில் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் பதவியேற்றால் சர்வகட்சி அரசாங்கத்துக்கும் கடந்த அரசாங்கத்துக்கு ஏற்பட்ட நிலைமையே ஏற்படும். அந்த அரசாங்கத்தையும் மக்கள் எதிர்க்க நேரிடும். கட்சியின் தீர்மானத்தை மீறுபவர்களுக்கு எதிராக எதிர்வரும் நாள்களில் கட்சியின் மத்திய குழு கூடி நடவடிக்கை எடுக்கவுள்ளது. கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக செயற்படுபவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் -என்றார். (ம)

# கப்ராலுக்கு தடை நீடிப்பு

கொழும்பு, மே 24

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், வெளிநாடு செல்ல விதிக்கப்பட்டுள்ள பயணத்தடை நீடிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென்னக்கோனால் தாக்கல் செய்யப்பட்ட மனுமீதே இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதம நீதிவான் ஹர்ஷன கெக்குணவெல, எதிர்வரும் ஜூலை மாதம் 25ஆம் திகதிவரை பயணத்தடையை நீடித்து உத்தரவு பிறப்பித்தார். (க-இ)

## அலரிமாளிகை மீதான தாக்குதல்; சந்தேகநபர்களைத் தேடி விசாரணை

கொழும்பு, மே 24

மே 9ஆம் திகதி முகமூடிகளை அணிந்து மோட்டார் சைக்கிள்களில் வந்த குழுவினர் அலரிமாளிகைக்கு முன்னால் பெற்றோல் குண்டுகளை வீசிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதனடிப்படையில் ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தி எடுக்கப்பட்ட நேரலைக் காட்சிகள் மற்றும் சி.சி.ரி.வி. காட்சிகளின் அடிப்படையில் சந்தேகநபர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அலரிமாளிகைக்கு முன்னால் மேற்கொள்ளப்பட்ட பெற்றோல் குண்டுத்தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூடு காரணமாக இரண்டு பொலிஸ் கவச வாகனங்கள், இரண்டு பேருந்துகள் சேதமடைந்தன. அத்துடன் கடந்த 9ஆம் திகதி அரசியல்வாதிகளின் வீடுகளுக்குத் தீ வைத்த பின்னணியில், பெற்றோல் குண்டுத் தாக்குதல்தாரிகள் தொடர்புபட்டிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது. (க-இ)

## பொலிஸ் வாகனம் தீக்கிரை சி.ஐ.டியால் ஒருவர் கைது!

கொழும்பு, மே 24

அமைதியான முறையில் போராட்டம் நடத்தியவர்கள் மீது ஆளும்கட்சி உறுப்பினர்கள் தாக்குதல் நடத்தியதை அடுத்து ஏற்பட்ட வன்முறைகளில், பஞ்சிகாவத்தையில் பொலிஸ் அதிகாரிகள் இருவர் தாக்கப்பட்டமை மற்றும் பொலிஸ் வாகனத்துக்கு தீ வைத்தமை தொடர்பில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்தச் சம்பவம் தொடர்பில் மருதானையைச் சேர்ந்த 28 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து, பொலிஸ் உயரதிகாரிகளின் வாகனத்திலிருந்து கழற்றி எடுக்கப்பட்டது என்று நம்பப்படும் உதிரிப்பாகம் ஒன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார். (எ-இ)

## நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகம் தீக்கிரை சி.ஐ.டி. விசாரணை!

கொழும்பு, மே 24

மே 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறையின்போது திவுலப்பிட்டிய பிரதேசத்திலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் அலுவலகம் தாக்கப்பட்டுத் தீவைக்கப்பட்டமை தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சமூக ஊடகங்களில் வெளியான வீடியோ மற்றும் ஒளிப்படங்களில் இருந்து பெண்ணொருவர், எம்.பியின் அலுவலகத்தை தாக்கி தீ வைத்தமை கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த பெண்ணைக் கைது செய்வதற்கு பொதுமக்களின் உதவியை நாடியுள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர், அவர் தொடர்பான தகவல்கள் தெரிந்தால் 0718594949, 071 4196609 ஆகிய அலைபேசி இலக்கங்களை தொடர்பு கொள்ளுமாறு அறிவித்துள்ளனர். (ம)

## மே 9 வன்முறை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பாதிக்கப்பட்ட எம்.பிக்கள் முறைப்பாடு

கொழும்பு, மே 24

நாட்டில் மே 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைகளால் பாதிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அவர்களது முறைப்பாடுகள் அனைத்தும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வன்முறைகளில் வீடுகள் எரிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஜனநாயக நாடு என்ற வகையில் அனைத்துத் தரப்பினரும் கருத்து வேறுபாடுகளை மதிக்க வேண்டும். முறைப்பாடு செய்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (க-இ)

## பிரிட்டனின் சாகோஸ் தீவில் தடுக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் உணவு தவிர்ப்பு!

கொழும்பு, மே 24

பிரிட்டனின் சாகோஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

89 இலங்கையர்கள் அடங்கிய குழுவில் 42 பேர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என த கார்டியன் செய்தி வெளியிட்டுள்ளது.

பிரித்தானியாவுக்குச் சொந்தமான சாகோஸ் தீவில் உள்ள இராணுவத்தளத்தில் கடந்த ஏழு மாதங்களாக தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் தங்கள் நிலைமையை வெளிப்படுத்துவதற்காக உணவு தவிர்ப்பை ஆரம்பித்துள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# மே 9 கலவரம்: 1,591 பேர் கைது

கொழும்பு, மே 24

மே 9 வன்முறை சம்பவம் தொடர்பில் இதுவரை ஆயிரத்து 591 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 719 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

பிரதமராக செயற்பட்ட மஹிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு தெரிவித்தும் அவர் பதவி விலகக்கூடாது என வலியுறுத்தியும் மே 9ஆம் திகதி திகதி, பொதுஜன பெரமுன உறுப்பினர்களால் அலரிமாளிகையில் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டத்துக்கு வந்திருந்த அரசியல் பிரமுகர்களும், அவர்களின் சகாக்களும் இணைந்து மைனா கோ ஹம, கோத்தா கோ ஹம போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தினர். கூடாரங்களை அடித்து நொருக்கி தீயிட்டுக் கொளுத்தினர்.

அறவழிப் போராட்டக்காரர்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டதால் கொதிப்படைந்த மக்கள், மஹிந்தவுக்கு ஆதரவு தெரிவிக்க வந்து அடாவடியில் ஈடுபட்டவர்களை தாக்கினர். அன்றிரவு நாடு முழுவதும் வன்முறை வெடித்தது. இந்த வன்முறைகள் தொடர்பிலேயே இதுவரை ஆயிரத்து 591 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 719 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ய-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 ஆவது திருத்தம் முற்றுமுழுதாக மாற்றியமைக்கப்படல் வேண்டும்!

## பஸிலைக் காப்பாற்றினால் கடும் விளைவு வாசுதேவ மீண்டும் எச்சரிக்கைத் தொனி

**கொழும்பு, மே 24**

**அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக நாட்டு மக்கள் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள். 20ஆவது திருத்தம் முழுமையாக இரத்துச் செய்யப்படாவிடின் சமூக கட்டமைப்பில் மீண்டும் பெரும் நெருக்கடி நிலைமை தோற்றம் பெறும் இவ்வாறு இடதுசாரி ஜனநாயக முன்னணியின் உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் பஸில் ராஜபக்சவை பாதுகாக்கும் நோக்கத்தை விடுத்து தம்மைத் தெரிவுசெய்த மக்களின் நிலைப்பாட்டுக்கு அமையச் செயற்படவேண்டும். பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடி தீவிரமடைந்துள்ள பின்னணியில் நாட்டு மக்கள் அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக உன்னிப்பாக அவதானித்து வருகிறார்கள்.

அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்காக வரிசையில் நிற்கும் மக்கள் 'அமெரிக்க பிரஜை இலங்கைப் பிரஜைகளை வீதியில் தள்ளியுள்ளார்' எனக் கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

இரட்டைக் குடியுரிமையுடைவர் அரசியலில் செல்வாக்குச் செலுத்த அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்தில் அனுமதி வழங்கப்பட்டது. இரட்டைக் குடியுரிமை விவகாரத்துக்குக் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தினோம். புதிய அரசமைப்பு ஊடாக இரட்டை குடியுரிமை விவகாரத்துக்கு சாதகமான தீர்வு எட்டப்படும் என ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதியை தொடர்ந்து 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்கினோம். புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் வழங்கிய வாக்குறுதியை ஜனாதிபதி நிறைவேற்றவில்லை.

இரட்டைக் குடியுரிமை யுடையவர் அரசியலில் செல்வாக்குச் செலுத்துவது முழுமையாக இரத்துச் செய்யப்படவேண்டும் என நாட்டு மக்கள் வலியுறுத்துகிறார்கள். சாதாரண மக்களும் அரசமைப்புத் திருத்தம் குறித்து அதிக கவனம் செலுத்துகிறார்கள். அதனால் மக்களை ஏமாற்றும் வகையில் அரசியல் சூழ்ச்சிகளை முன்னெடுக்க முடியாது- என்றார். (எ-இ)

# கௌரவமான அரசியல்வாதி இலங்கையில் தற்போதில்லை

## கரு தெரிவிப்பு

கொழும்பு, மே 24

நாட்டுக்கு எவ்வகையிலும் சேவையாற்றத் தயார் என முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு அளித்த பிரத்தியேக நேர்காணலில் கரு ஜெயசூரியவிடம் பிரதமர் பதவி மாற்றம் தொடர்பாகக் கேள்வி எழுப்பட்டது. அதற்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தற்போது மக்கள் மிகவும் அவதிப்பட்டு வருகின்றனர். முந்தைய அரசாங்கத்தால் ஏற்பட்டுள்ள குழப்பங்களை முறையாகக் களையவேண்டும். கௌரவமான அரசியல்வாதிகள் இலங்கையில் தற்போதில்லை- என்றார். (எ-இ)

# பஸிலைக் காப்பாற்றவே பெரமுன எத்தனிக்கும்!

## 21ஆவது திருத்தம் சந்தேகம்தான் மயந்த திசாநாயக்க எம்.பி. கணிப்பு

கொழும்பு, மே 24

21ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டியது அத்தியாவசியமானது. ஆனால் இரட்டைக் குடியுரிமை விவகாரத்தில் ராஜபக்ச குடும்பத்தினர் பொதுஜன பெரமுனவுக்கு அழுத்தம் பிரயோகித்து ஏதேனுமொரு குழப்பத்தை ஏற்படுத்துவார்கள்- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

புதிதாக நியமனம் பெற்றுள்ள நீதித்துறை அமைச்சர் 21ஆவது அரசமைப்புத் திருத்தம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று தெரிவித்துள்ளார். இது வரவேற்கக்கூடிய விடயமாகும். அதில் இரட்டைப் பிராஜவுரிமையுடையோர் தொடர்பான உள்ளடக்கமும் காணப்படுகின்றது என்று கூறப்படுகின்றது.

தற்போது நாடாளுமன்றத்தில் பொதுஜன பெரமுனவுக்கே பெரும்பான்மை காணப்படுகிறது. பொதுஜன பெரமுனவை இப்போதும் ராஜபக்ச குடும்பமே நிர்வகித்துக் கொண்டிருக்கிறது.

எனவே இரட்டைப் பிரஜாவுரிமை விவகாரத்தில் ராஜபக்ச குடும்பத்தினரால் பொதுஜன பெரமுனவினருக்கு இரகசியமான முறையில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படக்கூடும்.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் 21ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதில் ராஜபக்ச குடும்பம் ஏதேனுமொரு குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் என்பதே எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும்- என்றார். (எ-இ)

# உத்தியோகபூர்வ இல்லத்தை கையளித்தார் மைத்திரிபால!

கொழும்பு.மே 24

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, உத்தியோகபூர்வ இல்லத்தைக் கையளித்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த மார்ச் மாதம் 29ஆம் திகதி உயர்நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவுக்கு அமைய, அவர் குறித்த வீட்டைவிட்டு வெளியேறியுள்ளார்.

ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வுபெற்ற பின்பும் கொழும்பு பேஜெட் வீதியில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தைத் தொடர்ந்து பயன்படுத்துவதற்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மாற்றுக்கொள்கைகளுக்கான மத்திய நிலையம் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-இ)




**ஆ**ரையும் 'டீல்' போட்டு பிரிக்கிறதெண்டால் ரணிலுக்கு கைவந்த கலை. உடைக்கவே முடியாத புலிகள் இயக்கத்தில இருந்து கருணாவைப் பிரிச்ச ரணிலுக்கு, அரசியல் கட்சியளைப் பிரிச்சு வைக்கிறது ஒண்டும் பெரிய வேலை இல்லை. என்னதான் ஒற்றை ஆளா பார்லிமெண்டுக்குள்ள வந்தாலும், இப்ப அதே ஒற்றை ஆளா பிரதமரா மாறினாலும், டீல் பண்ணி, பிரிக்கிற புத்தி மட்டும் ரணிலை விட்டுப் போகேலை.

முதல்ல சுதந்திரக் கட்சி, சுயாதீனக் குழு, ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. , கூட்டமைப்பு எண்டு அரசாங்கத்துக்கு எதிரான கட்சிகள், குழுக்கள் எல்லாம் 'ரணிலுக்கு சப்போர்ட் பண்ண மாட்டம்' எண்டுதான் அறிக்கையள் விட்டவை. பேந்து பார்த்தால், தடாலடியா 'அமைச்சுப் பதவி ஏற்கமாட்டம், ஆனால் ரணிலின்ர அரசாங்கத்துக்கு சப்போர்ட் பண்ணுவம்' எண்டு ஜே.வி.பியைத் தவிர மற்றக் கட்சியள் எல்லாமே ஒரேமாதிரி தாளத்தைத் திருப்பிப் போட்டிச்சினம். அதுக்கு காரணம் இல்லாமல் இல்லை. நாட்டை நிமிர்த்துறதுக்கு அன்னம், தண்ணியில்லாமல் ரணில் வேலை செய்யிறார் எண்டு செய்தியள் வந்ததெல்லோ. அப்பிடி அவர் கண்முழிச்சுப் பார்த்த வேலை என்ன தெரியுமோ? சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, சுயாதீனக்குழு எண்டு ஒவ்வொண்டிலையும் பதவி ஏதும் கிடைக்குமோ? நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு இருக்கிற ஆக்கள் ஆரெண்டு கண்டுபிடிச்சு, அவையோட வழக்கம்போல 'டீலை' போட்டு தன்ர பொக்கற்றுக்க கொண்டந்திட்டார். இப்பிடி விட்டால், தங்கட பக்கத்தில நிக்கிறவை எல்லாரோடையும் ரணில் டீல் போட்டிடுவார் எண்ட பயத்திலதான், இவையள் ரணிலோட ஒரு டீலுக்கு போனவை.

'நீங்கள் எங்கட கட்சி ஆக்களைப் பிரிச்சு உங்கட பக்கம் இழுக்கக்கூடாது. அப்பிடி நல்ல பிள்ளையா நடந்தால் உங்களுக்கு சப்போர்ட் பண்ணுறம்' எண்டிருக்கினம். ரணிலும் அப்போதைக்கு சரியெண்டு தலையாட்டியிருக்கிறார். ஆனால், பார்லிமெண்டில பிரதி சபாநாயகரை தெரிவு செய்யிற விசயத்தைவைச்சு, இன்னும் பெரும்பான்மை பெரமுனவிட்டதான் இருக்கு எண்டது ரணிலுக்கு விளங்கிட்டுது. அதால தன்ர பக்கத்தை இன்னும் பலமாக்கிறதுக்காக முதலேதான் டீல் போட்ட ஆக்களை, அவையின்ர கட்சியில இருந்து இழுத்து, இப்ப அமைச்சுப் பதவியும் குடுத்திட்டார். ஏனெண்டால் இனிமேல் மைத்திரியோ, சஜித்தோ வாலாட்டினாலும், பெரமுனவின்ர சப்போர்ட்டோட நிண்டுபிடிக்கலாம் எண்டது ரணிலின்ர நினைப்பாம். அங்ககடிச்சு, இஞ்சகடிச்சு கடைசியில கூட்டமைப்பிலையும் சிலரோட டீல் பேசிக்கொண்டிருக்கிறாராம் ரணில். பாப்பம், இதிலையும் அவரின்ர தந்திரம் பலிக்குமோ? வழுக்குமோ?எண்டு !

ஆனால், இதுக்கு முதல் அஞ்சு தரம் பிரதமரா இருந்தும், முழுசா அவரால அந்தப்பதவியில குந்தமுடியேலை. அதைமாதிரி ஆறாம் தரமும் நடக்கப் போகுதெண்டுதான் கனபேர் கதைக்கினம். எல்லாரையும் ரணில் பிரிச்சால், ரணிலை பிரிச்செடுக்க ஆரும் ஒருத்தர் வராமலா போயிடுவினம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 300 மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு

## 25 மருந்துகள் அறவேயில்லை



**கொழும்பு, மே 24**

**நாட்டில் சுமார் 300 அத்தியாவசிய மருந்துகளுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அத்துடன் 25 அத்தியாவசிய மருந்துகள் எந்தவொரு அரச மருத்துவமனைகளிலும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

தீவிர இதய நோய்க்கான மருந்துகள், புற்றுநோயாளிகளுக்கான மருந்துகள், நீரிழிவு நோய்க்கான தடுப்பூசிகளான இன்சுலின் போன்றவை அரசாங்க மருத்துவமனைகளில் கையிருப்பில் இல்லை. தனியார்துறை மருந்தகங்களிலும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் தட்டுப்பாடு மட்டுமின்றி, தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியின் திறமையின்மை மற்றும் மோசமான நிர்வாகமும் இந்த நிலைமைக்குக் காரணம் என்று சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சு-இ)

# ஒரு மாதமேனும் ரணிலால் தாக்குப்பிடிக்க முடியாது

### ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

கொழும்பு, மே 24

இரகசிய ஒப்பந்தம் மூலம் இடைக்கால அரசாங்கத்தை அமைத்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் ஒரு மாதத்துக்குக்கூட ஆட்சியைக் கொண்டு செல்ல முடியாது. பிரதி சபாநாயகர் விவகாரத்திலேயே ரணில் விக்கிரமசிங்கவின் உண்மையான சுயரூபம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இரகசிய ஒப்பந்தத்தின் ஊடாகவே இடைக்கால அரசாங்கத்தை அமைத்துள்ளார். அவர் ராஜபக்ச குடும்பத்தை பாதுகாப்பதற்காக அன்றி நாட்டு மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக ஒருபோதும் செயற்படமாட்டார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் எமக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த கடிதத்தில் கட்சி சாரா அரசாங்கத்தில் பங்கேற்கவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய அரசாங்கம் எவ்வாறு கட்சி சாராததாக அமையும்? அவ்வாறெனில் சகல துறைசார் நிபுணர்கள் அழைக்கப்பட்டு அவர்களை உள்ளடக்கிய ஆட்சியொன்று அமைக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் ரணில் விக்கிரமசிங்க ஏனைய கட்சிகளிலுள்ள உறுப்பினர்களை இரகசியமாக அழைத்து திருட்டு அரசாங்கத்தையே அமைத்துள்ளார். அதன் காரணமாகவே அவரால் முன்னோக்கிச் செல்லமுடியாத நிலைமை காணப்படுகிறது. ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னர் இதுவரையில் ஒரு டொலரைக்கூடப் பெற்றுக் கொள்ளவில்லை.

பிரதி சபாநாயகர் விவகாரத்தில் அவர் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய ரோஹிணி கவிரத்னவை நாம் வேட்பாளராக நியமித்தோம். இறுதி நாள் வரை அவரை ஏகமனதான தெரிவு செய்யும் தீர்மானமே காணப்பட்டது. எவ்வாறிருப்பினும் அன்றைய தினம் பஸில் ராஜபக்ச பொதுஜன பெரமுனவினரை அழைத்து அஜித் ராஜபக்சவை வேட்பாளராக்கி ரணிலின் கோரிக்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து, அவரின் கொள்கையையும் கேள்விக்குறியாக்கினார்.

பெண் பிரதிநிதியை வேட்பாளராக நியமிக்கவேண்டும் என்று யோசனை முன்வைத்த ரணிலே அதற்கு முரணாக செயற்பட்டார். இதிலிருந்தே அவரது சுயரூபம் வெளிப்படுத்தப்பட்டது. 19ஆவது திருத்தம் மீள நடைமுறைப்படுத்தப்பட்டால் இரட்டைப் பிரஜாவுரிமையுடையோரது நாடாளுமன்ற உறுப்புரிமை இரத்தாகும். அதனால் பஸில் ராஜபக்சவின் நாடாளுமன்ற உறுப்புரிமையும் தானாகவே நீங்கும். ஆனால் அவர் அதற்கு இடமளிக்கமாட்டார். இந்த விடயத்தில் ரணிலின் நகர்வு எவ்வாறு அமையப்போகிறது?

இவ்வாறான கொள்கை மாறுபாட்டுடன் இந்த இடைக்கால அரசாங்கத்தால் இன்னும் ஒரு மாதம் கூட ஆட்சி செய்ய முடியாது. பின்வாசல் வழியாக நாடாளுமன்றத்துக்குள் நுழைந்த ரணில் விக்கிரமசிங்க, அதே பின்வாசல் வழியாகவே பிரதமராகவும் ஆகியுள்ளார். இவரால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது- என்றார். (எ-இ)

# இலங்கைக்கு புதிய தலைவர் ஜூன் மாதத்தில் உருவாவார்

### பிரபல ஜோதிடர் ஆருடம்

கொழும்பு, மே 24

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கையில் எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் திகதிக்கு பின்னர் புதிய தலைவரொருவர் வருவார் என்றும், அதன் பின்னர் நாட்டில் பல எழுச்சிகள் ஏற்படும் எனவும் பிரபல ஜோதிடர் கல்யாணி ஹேரத் மெனிகே தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையின் ஜாதகம் கும்பம் என்றழைக்கப்படும். இலங்கையின் அடையாளம் கும்பம் ஆகும். சனி இப்போது இந்த கும்ப இராசியில் இருக்கின்றார். பொதுவாக இராசியில் இருக்கும் சனி கொடியது. நாட்டை ஆளும் தலைவனுக்குக் கொடியது.

பொருளாதார நெருக்கடி காரணமாக தற்போதைய அரசாங்கம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்ற நிலையில், நெருக்கடிகள் மற்றும் எதிர்காலத்தில் அரசியல் களத்தில் பல மாற்றங்கள் ஏற்படவுள்ளன. ஜூலை 6ஆம் திகதி முதல் சனி விலகி ஜனவரி 19, 2023 முதல் பூஜ்ஜியத்திலிருந்து தொடங்கி இந்த நாடு சரியான திசையில் நகரும். எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் திகதிக்கு பின்னர் நாட்டுக்குப் புதிய தலைவர் ஒருவர் உருவாவார். அதன் பின்னர் நாட்டில் பல பெரும் எழுச்சிகள் ஏற்படும் - என்றார். (எ-இ)

# ராஜபக்சக்களின் பிரதிநிதி ரணில்

### இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, மே 24

ரணில் விக்கிரமசிங்க விலை போய்விட்டார். அவர் ராஜபக்சக்களின் பிரதிநிதியாகச் செயற்படுகின்றார். அவருக்கு இப்போது ஆதரவு வழங்க முடியாது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ரணில் விக்கிரமசிங்க 5 தடவைகள் பிரதமர் பதவியை வகித்தவர். இந்த முறை 6ஆவது தடவையாகவும் பதவியேற்றுள்ளார். ஆனால் எந்தவொரு முறையும் தனது பதவிக் காலத்தை அவர் முழுமையாக பூர்த்தி செய்தது கிடையாது.

கடந்த பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்கவால் 20 ஆயிரம் வாக்குகளைக் கூட பெறமுடியாமல்போனது. தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் வந்தார். அவருக்கு மக்கள் ஆணை இல்லை. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவிவிலகவேண்டும் என்பதே நாட்டு மக்களின் கோரிக்கை. அந்தக் கோரிக்கையை ஏற்றே ஐக்கிய மக்கள் சக்தி பிரதமர் பதவியை ஏற்கவில்லை. ஜனாதிபதி பதவி விலகினால்தான் ஆட்சி பொறுப்பேற்கப்படும் என அறிவிக்கப்பட்டது. ஜே.வி.பியும் இதே நிலைப்பாட்டில்தான் உள்ளது.

ஆனால் ராஜபக்சக்களுடன் ரணில் இணைந்துள்ளார். மொட்டு கட்சி ஆட்சிதான் வரபோகின்றது. ராஜபக்ச போய், ரணில் வந்துள்ளார். இதுதான் ஏற்பட்டுள்ள மாற்றம். இதை மக்கள் ஏற்கமாட்டார்கள்.

புதிய அரசில் இணையமாட்டோம். அமைச்சுப் பதவிகளை ஏற்கமாட்டோம். எதிரணியில் இருந்து செயற்படுவோம். ஜனாதிபதி பதவிவிலகவேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம் - என்றார். (எ-இ)

# நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அபேவர்த்தன ஆலோசனை

கொழும்பு, மே 24

நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

ஒரு இலட்சம் அமெரிக்க டொலரை வைப்பீடு செய்வோருக்கு 6 மாதங்களின் பின்னர் 25 ஆயிரம் அமெரிக்க டொலருக்கு சுங்க வரியற்ற அனுமதிச் சான்றிதழை வழங்க வேண்டும் என்று அவர் பரிந்துரைத்துள்ளார்.

இதேபோன்று வாகனங்களுக்கான வரியாக அரசாங்கத்துக்கு 10 ஆயிரம் அமெரிக்க டொலரைச் செலுத்தவேண்டும் என்றும் அவர் பரிந்துரைத்துள்ளார். (எ-இ)

# ஆஸி. சென்ற யோஷிதவை காப்பாற்ற கடும் முயற்சிகள்

கொழும்பு, மே 24

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் மகன் யோஷித ராஜபக்ச மற்றும் அவரது குடும்பத்தினர் அவுஸ்திரேலியாவுக்குத் தப்பிச் சென்று மெல்பேர்ன் நகரில் தங்கியுள்ள நிலையில் அங்கு அவரைக் காப்பாற்றுவதற்காகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று கூறப்படுகின்றது.

யோஷித ராஜபக்சவும் அவரது குடும்பத்தினரும் அவுஸ்திரேலியாவுக்கு தப்பிச் சென்று மெல்போர்னில் உள்ள இந்திய பிரபாத் கருணாஜீவ மற்றும் அவரது மனைவி ஷாதியா கருணாஜீவ ஆகியோரின் வீட்டில் பதுங்கியுள்ளனர் என்று அண்மையில் சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டிருந்தது.

இந்தச் செய்தி வெளியாகிய பின்னர், யோஷித மற்றும் அவரது குடும்பத்தினர் ராஜபக்சவினருக்கு நெருக்கமான கபில சந்திரசேன என்பவரின் வீட்டுக்கு தப்பிச் சென்றுள்ளனர் என்றும் ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இலங்கையர்கள் மஹிந்த மற்றும் கோத்தாபய அரசுக்கு எதிராக போராடி வரும் நிலையில் மஹிந்தவின் மகன் யோஷிதவின் இருப்பிடம் பற்றிய தகவல் வெளியாகியமை மஹிந்தவுக்கு புதிய சிக்கலைத் தோற்றுவித்திருக்கின்றது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் நெருக்கடியால் மருத்துவமனையில் சிக்கல்

## நோயாளர் அனுமதியை மட்டுப்படுத்தத் தீர்மானம்

**கொழும்பு, மே 24**

**காலி - கராப்பிட்டிய போதனா மருத்துவமனையில் பணியாற்றும் ஊழியர்கள் பணிக்கு திரும்புவதற்கு எரிபொருளைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ள நிலையில் நேற்று முதல் நோயாளர்களை அனுமதிப்பது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் ஷெல்டன் பெரேரா தெரிவித்தார்.**

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

எரிபொருள் நெருக்கடி காரணமாக மருத்துவமனை ஊழியர்களின் வருகை மிகக் குறைந்த அளவில் உள்ளது. அத்தியாவசிய சேவைகளுக்கு எரிபொருள் வழங்கப்படுகின்ற போதும் அதற்கான முறையான வேலைத்திட்டம் இல்லை. சுகாதார சேவையில் உள்ள மருத்துவர்கள் மற்றும் தாதியர்களுக்கு மாத்திரம் எரிபொருளை வழங்கி நோயாளர் பராமரிப்புச் சேவையைப் பேணமுடியாது.

இதனால் நோயாளர்களை மருத்துவமனையில் அனுமதிப்பதை மட்டுப்படுத்த அனுமதிக்கவேண்டும் என்று உரிய திணைக்களங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனைப் பராமரிப்புச் சேவையை அவசர மற்றும் முன்னுரிமை சேவையாகக் கருதி மருத்துவமனை ஊழியர்களின் போக்குவரத்துப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மருத்துவமனை ஊழியர்களின் வாகனங்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்று மருத்துவமனைப் பணிப்பாளர் அந்தக் கடிதத்தில் கோரியுள்ளார். (எ-இ)

# 910 லீற்றர் பெற்றோல் கடத்திய பொலிஸ் அதிகாரி



மட்டக்களப்பு, மே 24

மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேசத்தில் இருந்து அம்பாறை மகா ஓயா பிரதேசத்துக்குப் பிக்கப் ரக வாகனத்தில் பெற்றோல் கடத்திச்சென்ற பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் ஓய்வுபெற்ற இராணுவச் சிப்பாய் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், அவர்களிடம் இருந்து 910 லீற்றர் பெற்றோல் மீட்கப்பட்டுள்ளது என்றும் வெல்லாவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.

வெல்லாவெளிப் பிரதேசத்தில் இருந்து அம்பாறை நோக்கி நேற்று அதிகாலை 3.30 மணியளவில் சென்ற பிக்கப் ரக வாகனத்தை வெல்லாவெளிப் பொலிஸ் வீதிச் சோதனைச் சாவடியில் பொலிஸார் சோதனையிட்டனர்.

வெல்லாவெளி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து வியாபாரத் துக்காக கலன்களில் மறைத்து எடுத்துச் செல்லப்பட்ட 910 லீற்றர் பெற்றோல் அந்த வாகனத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

அதையடுத்து வாகனத்தில் பயணித்த மகாஓயா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் 45 வயதுடைய பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் ஓய்வுபெற்ற 41 வயதுடைய இராணுவச் சிப்பாய் ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதி மன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், இதுதொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

# இடைத்தரகர்களுக்கு எரிவாயு வழங்கப்படாது

## லிட்ரோ அறிவிப்பு



கொழும்பு, மே 24

சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகிக்கப்படவுள்ள முறைமை தொடர்பில் லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. லிட்ரோ வாடிக்கையாளர்கள் நாடளாவிய ரீதியில் உள்ள 416 முகவர் நிலையங்களில் எரிவாயுவை பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லிட்ரோ எரிவாயு முகவர் நிலையத்துக்கு நேரகாலத்துடன் வரும் நபர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படும் என்பதோடு, இடைத்தரகர்களிடம் சமையல் எரிவாயுவைப் பெற்றுக்கொள்ள முடியாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்கான வரிசைகள் அதிகரித்துள்ள நிலையில், எரிவாயுக் கப்பல்கள் இரண்டுக்குத் தேவையான நிதி இன்று செலுத்தப்படவுள்ளது என்று லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தக் கப்பல்களில் இருந்து எரிவாயு தரையிறக்கப்படும் பட்சத்தில் அடுத்த இரண்டு வாரங்களுக்கு இலங்கையில் எரிவாயுத் தட்டுப்பாடு காணப்படாது என்று லிட்ரோ நிறுவன தலைவர் விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

காரைநகர் - ஊர்காவற்றுறை பாதைப்படகு

# எரிபொருள் இன்மையால் சேவையில் ஈடுபடவில்லை

## அரச உத்தியோகத்தர்கள் விசனம்

யாழ்ப்பாணம், மே 24

காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையே பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பாதைப்படகு எரிபொருள் இன்மையால் கடந்த ஒரு வாரகாலமாக சேவையில் ஈடுபடவில்லை. இதனால் பொதுமக்களும் தாமும் பாதிக்கப்பட்டதாக அரச உத்தியோகத்தர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

மண்ணெண்ணெய் இன்மையாலேயே பாதைப் படகுச் சேவை இடம்பெறவில்லை என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபைப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பொறுப்புடைய ஓர் அரச நிறுவனம் மண்ணெண்ணெயை தேவைக்கேற்ப எடுத்து வைத்து மக்களுக்கு சீரான சேவையை வழங்கவேண்டும். அதை விடுத்து, கடல் கடந்து போக்குவரத்துச் செய்யும் அரச பணியாளர்களையும் பொதுமக்களையும் சிரமத்துக்குள்ளாக்குகின்றனர்.

தனியார் படகுகளில் மோட்டார் சைக்கிள்களை ஏற்றும்போது அவை சேதமடைகின்றன.

இதுதொடர்பாக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் - என்றனர். (ம-14)

# வெளியிடங்களில் எரிபொருளை கொள்வனவு செய்யவேண்டாம்

## மக்களுக்கு அறிவுறுத்து



கொழும்பு, மே 24

எரிபொருள் விநியோகஸ்தர்களைத் தவிர்ந்து ஏனைய தரப்பினரிடம் எரிபொருள்களைக் கொள்வனவு செய்ய வேண்டாம் என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எரிபொருள் சேகரிப்பில் ஈடுபட்டுள்ள நபர்கள், ஏனைய திரவங்களுடன் கலந்து அவற்றை அதிக விலைக்கு விற்பனை செய்வது விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதுபோன்ற வணிகங்களை ஊக்குவிக்க வேண்டாம். தகவல் அறிந்தவர்கள் முறைப்பாடுகளை வழங்க வேண்டும் என்று அவர் தனது ருவிற்றரில் பதிவிட்டுள்ளார். (க-இ)

# ஜனாதிபதி கோத்தாபய பதவிவிலக வேண்டும்!

## மகேல வலியுறுத்து

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உடனடியாகப் பதவிவிலக வேண்டும் என்று இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மகேல ஜயவர்த்தன வலியுறுத்தினார்.

பெற்றோல் மற்றும் மருந்து பற்றாக்குறையால் இரண்டு குழந்தைகள் உயிரிழந்தமை தொடர்பான விடயம் நாடெங்கும் பூதாகரமாகி வருகின்றது. இதுதொடர்பாக மருத்துவர் ஒருவரின் பதிவுக்கு மகேல பதிலளித்துள்ளார்.

மகேல தனது குறித்த பதிவில், 'இதைப் படித்துவிட்டு கோத்தாபய ராஜபக்ச குற்ற உணர்வுடன் இருந்தால் உடனடியாக பதவிவிலக வேண்டும். இந்த நிலைக்கு அவரே நேரடிப் பொறுப்பு. அத்தோடு [illegible] இருந்த [illegible] கூற வேண்டும்' எனப் பதிவிட்டுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிபொருள் இல்லாத அவலம்

# மருத்துவமனையில் சேர்க்க தாமதமானதால் சிசு இறப்பு

கொழும்பு, மே 24

எரிபொருள் கிடைக்காத காரணத்தால், மருத்துவமனையில் சேர்ப்பிப்பதற்கு ஏற்பட்ட தாமதத்தால் பிறந்து இரண்டு நாள்களேயான சிசுவொன்று உயிரிழந்துள்ளது.

ஹல்தும்முல்ல - சொரகுனே ரதகந்துர என்ற இடத்திலேயே இந்த பரிதாபகர சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குழந்தையின் உடல் திடீரென மஞ்சள் நிறமாவதை அவதானித்த வீட்டார், மருத்துவமனைக்குச் செல்வதற்குப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டபோதிலும் எரிபொருள் இல்லாததால் அது பயனளிக்கவில்லை.

இதனால் குழந்தை ஒரு மணி நேரம் தாமதமாகவே மருத்துவமனையில் சேர்ப்பிக்கப்பட்டு பின்னர் உயிரிழந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம)



## கஞ்சா சுருட்டுடன் ஒருவர் கைதானார்

யாழ்ப்பாணம், மே 24
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் காட்டுப்புலம் பகுதியில் கஞ்சா சுருட்டு வைத்திருந்த குற்றச்சாட்டில் 47 வயதான குடும்பத்தலைவர் ஒருவர் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ய-125)

## சுழிபுரம் பகுதியில் சிலிண்டர் திருட்டு

யாழ்ப்பாணம், மே 24
வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரிக்கு முன்பாக உள்ள வீட்டில் இரண்டு வெற்று சிலிண்டர்கள் நேற்றுமுன்தினம் திருடப்பட்டுள்ளன.
வீட்டின் உரிமையாளர் வெளியில் சென்ற நிலையில் மேற்படி சிலிண்டர்கள் திருடப்பட்டுள்ளன. இது தொடர்பில் வீட்டின் உரிமையாளரால் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. (ம-14-125)

# கிளிநொச்சி, முல்லைத்தீவில் 33,670 வெடிபொருள்கள் மீட்பு

## ஸார்ப் நிறுவன முகாமையாளர் தெரிவிப்பு

**கிளிநொச்சி, மே 24**
**கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இதுவரை 33 ஆயிரத்து 670 வெடி பொருள்கள் அகற்றப்பட்டன என்று கண்ணிவெடி அகற்றும் ஸார்ப் நிறுவனத்தின் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2022 மே மாதம் வரையான காலப்பகுதி வரையிலே குறித்த வெடிபொருள்கள் அகற்றப்பட்டன. தற்போது கிளிநொச்சி, முகமாலை மற்றும் புதுக்குடியிருப்பு, சுதந்திரபுரம், அம்பகாமம் பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார்.
ஜப்பான் மற்றும் அமெரிக்காவின் நிதியுதவியில் ஸார்ப் நிறுவனத்தால் இந்தக் கண்ணிவெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



அத்துடன் குறித்த நிறுவனத்தால் பச்சிலைப்பள்ளி பிரதேச மருத்துவமனையில் அண்மையில் சிரமதானமும் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-14-6)

## பளை – இந்திராபுரம் கிராமத்தில் தொடரும் திருட்டுச் சம்பவங்கள்!

கிளிநொச்சி, மே 24
பளை, இந்திராபுரம் கிராமத்தில் பல பொருள்கள் தொடர்ச்சியாக திருடப்பட்டு வருகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.
மின்மோட்டர்கள், நீர்விநியோகக் குழாய்கள் போன்றவற்றுடன் பெறுமதிமிக்க பொருள்கள் இனந்தெரியாதோரால் அடிக்கடி திருடப்பட்டு வருகின்றன. குறித்த பகுதியில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவிகளாக விவசாயத்தை மேற்கொள்ள மின் மோட்டர்கள், நீர்விநியோகக் குழாய்கள் உள்ளிட்ட பொருள்கள் வழங்கப்படும் நிலையில், அவ்வாறு வழங்கப்படும் பொருள்களே அதிகம் திருடப்படுகின்றன என்று மக்கள் மேலும் குற்றஞ்சாட்டுகின்றனர்.
இது தொடர்பில் பொலிஸார் விரைவில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-14-9)

## திருட்டில் ஈடுபட்டவருக்கு பொதுமக்கள் 'கவனிப்பு'!

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காக்கைதீவுப் பகுதியில் தண்ணீர் இறைக்கும் மோட்டரைத் திருடியவர் பொதுமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு உரிய கவனிப்பின் பின்னர் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டார்.
போதையில் நின்ற குறித்த நபர் வீதியில் பிறிதொருவரைக் காவலுக்கு நிறுத்திவிட்டு தண்ணீர் இறைக்கும் மோட்டரைத் திருடியுள்ளார். பெண்ணொருவர் அதை அவதானித்து கூக்குரலிட்டதை அடுத்து பொதுமக்கள் ஒன்றுகூடி மேற்படி நபரை நையப்புடைத்து பொலிஸில் ஒப்படைத்தனர்.
இது தொடர்பில் பொலிஸாரால் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-ய-125)

## வன்முறையைத் தடுப்பது தொடர்பில் மன்னாரில் விசேட செயலமர்வு



மன்னார், மே 24
இலங்கையில் வன்முறைத் தீவிரவாதத்தைத் தடுப்பது தொடர்பில் சமூகக் குழுக்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான விசேட செயலமர்வு மன்னாரிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
இதன்போது பிரதேச ரீதியாக ஏற்படும் பிரிவினைகள், வன்முறைத் தீவிரவாத செயற்பாடுகளை நோக்கி நகர்வதைத் தடுக்கும் நோக்கிலும், பிரதேச மற்றும் மாவட்ட ரீதியில் இயங்கி வரும் சிவில் சமூகக் குழுக்களின் தீவிரவாதத்துக்கு எதிரான செயற்திறன்களை மேம்படுத்தும் விதமாகவும் கலந்துரையாடப்பட்டது.
தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில், இலங்கை கெல்விட்டாஸ்க் அமைப்பு மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையில் மாவட்ட ரீதியில் உள்ள இளைஞர்கள், சர்வ மதக்குழு உறுப்பினர்கள், அரச உத்தியோகத்தர்கள், சிவில் சமூக அமைப்புகள் ஆகியோர் செயலமர்வில் கலந்து கொண்டனர். (ம-14-213)

## சிறுமி மீது துர்நடத்தை; கைதானார் இளைஞர்!

யாழ்ப்பாணம், மே 24
காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சிறுமியை துர்நடத்தைக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.
16 வயதாகும் குறித்த சிறுமியை மேற்படி இளைஞர் துர்நடத்தைக்கு உட்படுத்தியுள்ளார் என்று காங்கேசன்துறைப் பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைவாக மேற்படி இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார். சட்டமருத்துவ அறிக்கைக்காக சிறுமி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம-125)

## அயலவர்கள் கூடியதால் திருடர் தப்பியோட்டம்

### புளியம்பொக்கணையில் சம்பவம்

கிளிநொச்சி, மே 24
அயலவர்கள் ஒன்றுகூடி சுற்றிவளைத்ததை அடுத்து, திருடர் தப்பிப்பிழைத்து ஓடிய சம்பவம் புளியம்பொக்கணைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.
திருடர் வீட்டுக்குள் நுழைவதை அவதானித்த வீட்டின் உரிமையாளர்கள் கத்திக்கூச்சலிட்டதை அடுத்து விரைந்து செயற்பட்ட ஊரவர்கள் துரிதகதியில் சுற்றிவளைத்ததை அடுத்தே திருடர் தப்பியோடியுள்ளார்.
இது தொடர்பில் பொலிஸாருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (ம-14-21)

## வாகன விபத்தில் சிறுமி உயிரிழப்பு

கொழும்பு, மே 24
ஜீப் ரக வாகனம், முச்சக்கர வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 7 வயதுச் சிறுமி உயிரிழந்துள்ளார்.
இந்த விபத்து இரத்தினபுரிப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது.
விபத்தில் படுகாயமடைந்த சிறுமி சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மருந்துக்கும் இல்லையே மருந்து!

நாட்டில் எரிபொருள், எரிவாயு மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டுக்கு அப்பால் மருத்துவத்துறையில் எழுந்துள்ள நெருக்கடிகள் அச்சமூட்டுவனவாக இருக்கின்றன.

நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்துப் பொருள்களுக்கான தட்டுப்பாட்டால் பெரும் இக்கட்டான நிலைமை இலங்கையில் ஏற்படும் என்று மருத்துவர்கள் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக எச்சரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்போதும் இந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. மருந்துகளுக்கான நெருக்கடி அதிகரித்திருக்கிறதே தவிர குறைந்திருப்பதாகத் தெரியவில்லை. மருந்து வகைகளுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறை காரணமாக உயிர்காக்கும் சத்திரசிகிச்சைகளைக் கூட நிறுத்துமளவுக்கு நிலைமை கைமீறிக்கொண்டிருக்கின்றது.

இலங்கை 80 சதவீதமான மருந்துகளை இறக்குமதி மூலமே பெற்றுக்கொள்கின்றது. இப்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் மருந்துப் பொருள்களின் இறக்குமதியும் வெகுவாகத் தடைப்பட்டிருக்கின்றது. கையிருப்பில் இருந்த மருந்துப் பொருள்கள் தீர்ந்துள்ள நிலையில், மருத்துவக் கட்டமைப்பு சீர்குலையும் அபாயம் ஏற்பட்டிருக்கின்றது.

புற்றுநோய்க்கான மருந்துகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக மருத்துவர்கள் கையறு நிலையில் இருக்கிறார்கள். திட்டமிட்ட நாள்களில் புற்றுநோயாளர்களுக்கான சிகிச்சையை மேற்கொள்ள முடியாது இருக்கின்றது என்று கொழும்பில் உள்ள அபேக்ஷா புற்றுநோய் மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர்கள் கூறுகின்றனர். இந்தநிலைமையே நாட்டின் ஏனைய மருத்துவமனைகளிலும் இருக்கின்றது. புற்றுநோய் மட்டுமல்ல இதய நோய் , நீரிழிவு, இரத்த அழுத்தம் உட்பட சகலவிதமான மருந்து வகைகளுக்கும் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. அவ்வளவு ஏன், பலரும் தலையிடிக்கு கைமருந்தாகப் பயன்படுத்தும் கோடரித் தைலம் , இலங்கை மருந்தகங்களில் காணாமல் போய் மாதக்கணக்காகின்றது. குழந்தைகளுக்கு காய்ச்சல் வந்தால் தாய்மார் உடனடியாக நாடும் பனடோல் சிரப் உள்ளிட்டவையும் வெகு அரிதான பொருள்களாக மாறிவிட்டன.


மருந்து மற்றும் எரிபொருள் பற்றாக்குறையால் இரு குழந்தைகள் நாட்டில் உயிரிழக்க நேரிட்டுள்ளது என்று தெற்கு மருத்துவர் ஒருவர் கூறியிருக்கிறார். இது இலங்கை மக்கள் எதிர்கொள்ளவுள்ள பேரழிவின் முதற்கட்டமே. மருத்துவக் கட்டமைப்பு செயலிழந்தால் ஏற்படப் போகும் உயிரிழப்புக்கள், நாட்டில் கொரோனாத் தொற்றுக் காலத்தில் ஏற்பட்டதை விடவும் மோசமாக இருக்கும் என்பது மருத்துவர்களின் கணிப்பு. ஆனால் அரசாங்கம் இந்த விடயத்தில் சரியான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை என்றே தோன்றுகின்றது.

மருத்துவத்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளையும், அவற்றால் ஏற்படவிருக்கும் பாரதூரமான விளைவுகளையும் நாடும், மக்களும் இன்னமும் சரியாக விளங்கிக்கொள்ளவில்லை. எரிவாயு, எரிபொருள், உணவுப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் மக்களின் கவனமும், நாட்டின் கவனமும் அவற்றின் மீதே குவிந்திருக்கின்றன. அரசாங்கமும் மக்கள் எதிர்ப்பலைகளைச் சமாளிப்பதற்காக எரிபொருள், எரிவாயு இறக்குமதிகளிலேயே அதிக கவனம் செலுத்தியிருக்கின்றதே தவிர, மருத்துவத்துறை சார்ந்த பிரச்சினையில் மெத்தனப் போக்கையே கைக்கொண்டிருக்கின்றது.

மருத்துவத்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால், ஒரு மிகப்பெரும் மருத்துவப்படுகொலை இலங்கையில் நிகழவும் வாய்ப்புள்ளது. அந்த நிலைமையை உணர்ந்து அரசாங்கம் மருத்துவ நெருக்கடியைத் தீர்ப்பதற்கும் முன்னுரிமை அளிக்கவேண்டும். பெற்றோல், டீசல், எரிவாயு, பால்மா என எல்லாம் தாராளமாக வந்தாலும் கூட, நாடும் மக்களும் ஆரோக்கியமாக இருப்பதற்குத் தேவையான மருந்துகள் இல்லாவிடின் இலங்கை உலகின் நவீன சுடுகாடாக மாறவும் கூடும். அமைச்சரவையை விரிவாக்கினால் நாட்டின் ஒட்டுமொத்தப் பிரச்சினைகளையும் இல்லாமல் செய்துவிடலாம் என நம்பும் ஆட்சியாளர்கள் இனியாவது யதார்த்தத்தை உணர்வார்களா ?

நாளொரு நல்வார்த்தை

"உன் மனம் வலிக்கும்போது சிரி பிறர் மனம் வலிக்கும் போது சிரிக்கவை "
- சார்லி சாப்ளின்




# யாழ்ப்பாண மாவட்டத்தில் வன்முறைகள் மிகக்குறைவு!

## பொலிஸ் அத்தியட்சகர் நற்சான்றிதழ்



**யாழ்ப்பாணம்,மே 24**

**நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக, இலங்கையில் பல இடங்களிலும் பல வன்முறைகள் பதிவாகிய போதிலும், யாழ்ப்பாண மாவட்டத்தில் அவ்வாறான தீவிர வன்முறைகள் ஏற்படாமை வரவேற்கத்தக்க விடயம் என்று யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உயித் என். பி.லியனகே தெரிவித்தார்.**

யாழ்ப்பாணப் பிராந்திய பொலிஸ் பொறுப்பதிகாரி அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது, யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் தமது அன்றாடச் செயற்பாடுகளை எவருக்கும் இடையூறு விளைவிக்காத வகையில், பொலிஸ் அதிகாரிகளுடன் முரண்படாமலும் முன்னெடுத்து வருகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு பொதுமக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்குகின்றனர். பொலிஸ் திணைக்களம் என்ற ரீதியில் யாழ்ப்பாண மக்களுக்கு நாங்கள் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

மாவட்டத்தில் சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு நாம் ஒத்துழைப்பை வழங்கவேண்டும். ஆலயத் திருவிழாக்களின்போது, ஒலிபெருக்கிச் சத்தத்தைக் குறைத்து, மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். பரீட்சைக் காலங்களில் ஒலிபெருக்கிப் பாவனைக்கு தடைவிதித்திருக்கின்றோம். நிபந்தனைகளுடன் மாத்திரமே ஒலி பெருக்கிப் பாவனைக்கு அனுமதி வழங்கப்படும்.

அதேவேளை மாவட்டத்தில் குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சில சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்கள் இன்னமும் கைது செய்யப்படவில்லை. அவர்களும் விரைவில் கைது செய்யப்படுவர். மாவட்டத்தில் இடம்பெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் - என்றார். (சு-26)

# இலங்கையில் உணவு நெருக்கடி: ஐ.நா. உணவு அமைப்பு உதவி!

இலங்கையில் உணவுப்பற்றாக்குறை அதிகரித்துவரும் நிலையில், உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கான உதவிகளைப் பெறுவதற்கு, ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு ஆதரவு வழங்க உறுதியளித்துள்ளது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நாளுக்குநாள் உணவுப்பற்றாக்குறை தீவிரமாகிவரும் நிலையில் அதைச் சமாளிக்க, சர்வதேச உதவிகளைப் பெற இலங்கைக்கு உதவுவதாக உணவு மற்றும் விவசாய அமைப்பு உறுதியளித்துள்ளது என்று பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** தொழிலில் லாபம் காண்பீர்கள். அரசு வழியிலான முயற்சிகள் வெற்றியாகும். தொழிலில் இருந்த தடைகள் விலகும். திடீர் பணவரவால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** துணிச்சலாக செயற்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். புதிய பொறுப்பு உங்களைத்தேடி வரும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிட்டும்.

**மிதுனம் :** அமைதியாக செயற்பட்டு சாதிக்க வேண்டிய நாள். முயற்சியில் தடைகளைச் சந்திக்கலாம். எதிர்பார்த்த தகவல் வராமல் சோர்வடைவீர்கள். செயல்களில் அவசரம் வேண்டாம்.

**கடகம்:** உங்களை சோர்வடையச் செய்யும் வகையில் சிலரின் நடவடிக்கை இருக்கும். அமைதி காப்பது நல்லது. வீண்வாக்குவாதங்களில் ஈடுபடாதீர்கள்.

**சிம்மம்:** சங்கடங்களில் இருந்து விடுபடுவீர்கள். நீங்கள் எதிர்பார்த்தவற்றில் இன்று ஆதாயம் உண்டாகும். பிரச்சினைகளைச் சமாளித்து வெளியில் வருவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**கன்னி:** நினைத்ததை சாதித்து மகிழ்வீர்கள். உங்களுடைய செயல்களில் வேகம், விவேகம் இருக்கும். சோர்வு விலகி உற்சாகமாகச் செயற்படுவீர்கள். சங்கடம் காணாமற் போகும்.

**துலாம்:** நினைத்தது ஒன்று நடப்பது ஒன்றாக இருக்கும். செயல்களில் தடை, தாமதம் இன்று ஏற்படும். எதிர்பார்த்திருந்தவற்றில் ஏமாற்றம் உண்டாகும். முயற்சிகளில் சிரமம் காண்பீர்கள்.

**விருச்சிகம்:** அரசு பணியாளர்கள் கவனமாக செயற்பட வேண்டிய நாள். அதிகாரிகளின் கோபம் உங்கள் மீது திரும்பலாம். முயற்சிகளில் தடைகளை சந்திப்பீர்கள். மற்றவர்களுக்குப் பதில் சொல்லும் நிலை இன்று உண்டாகும்.

**தனுசு:** தடைபட்ட வருமானம் கைக்கு வரும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். அதிர்ஷ்டமான நாள். விடா முயற்சியால் நினைத்ததைச் சாதிப்பீர்கள். தனித்திறமை வெளிப்படும்.


**மகரம்:** பணவிவகாரத்தில் கவனம் தேவை புதிய முதலீடுக்குரிய முயற்சியைத் தள்ளிப் போடுவதால் இழப்பில் இருந்து விடுபடலாம். குடும்பத்தினரின் நெருக்கடியால் சங்கடங்களுக்கு ஆளாகலாம்.

**கும்பம்:** மனதில் இருந்த குழப்பங்கள் விலகும். திட்டமிட்டு செயற்பட்டு நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள். குழப்பங்களைத் தவிர்த்தால் உங்களுடைய முயற்சிகள் வெற்றியாகும்.

**மீனம்:** திடீர் செலவால் தடுமாறுவீர்கள். வெளியூர் பயணங்களால் சங்கடத்தைச் சந்திப்பீர்கள். வேலைப்பளு அதிகரிக்கும். ஓய்வின்றிச் செயற்படுவீர்கள். செலவு அதிகரிக்கும்.

# குரங்கு அம்மையால் பாதிப்பு; தனிமைப்படுத்துதல் கட்டாயம்

## பெல்ஜியம் அறிவிப்பு



**பிரஸ்ஸல்ஸ், மே 24**

**குரங்கு அம்மை நோய் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனிமைப்படுத்தலை கட்டாயமாக்கியுள்ளது பெல்ஜியம் அரசு.**

வேகமாகப் பரவிவரும் குரங்கு அம்மை நோய்ப் பாதிப்பு தற்போது 12 நாடுகளில் 92 பேருக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது. எனினும் இது வரை இந்தப் பாதிப்பால் எவரும் உயிரிழக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

குரங்கு அம்மை பாதித்தோருடன் நேரடியாக உடல்ரீதியான தொடர்பு கொண்டவர்கள் அறிகுறிகளைக் கொண்டிருந்தால் அவர்கள் அதிக ஆபத்தில் உள்ளவர்கள் என உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

இந்த நிலையில் குரங்கு அம்மை நோய் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தனிமைப்படுத்துதலைக் கட்டாயமாக்கிய முதல் நாடாக பெல்ஜியம் மாறியுள்ளது.

நாட்டில் குரங்கு அம்மைத் தீவிரம் அடையாமல் இருக்க பெல்ஜிய சுகாதார அதிகாரிகள் இந்த முடிவை எடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# குவாட் அமைப்பில் பங்கேற்க பைடன் ஜப்பான் பயணம்


வொஷிங்டன், மே 24

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் குவாட் அமைப்பு மாநாட்டில் பங்கேற்க தனி விமானத்தில் ஜப்பான் சென்றுள்ளார்.

அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் உருவாக்கப்பட்டுள்ள குவாட் என்னும் நாற்கர கூட்டமைப்பின் உச்சி மாநாடு, ஜப்பானில் இன்று நடைபெறவுள்ளது. இந்த குவாட் உச்சி மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பங்கேற்கிறார்.

இதற்கென ஜோ பைடன் குவாட் அமைப்பு மாநாட்டில் பங்கேற்க தனி விமானத்தில் ஜப்பான் சென்றுள்ளார். குவாட் மாநாட்டின்போது இந்தியா, அவுஸ்திரேலியா, ஜப்பான், பிரதமர்களுடன் தனித்தனியாகவும் பைடன் பேச்சு நடத்தவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க அதிபராகப் பதவியேற்றபின் ஆசிய நாடுகளுக்கு ஜோ பைடன் பயணம் மேற்கொள்வது இதுவே முதல்முறை ஆகும். (ச-இ)



# அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமர் பதவியேற்பு

சிட்னி, மே 24

அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமரான அன்ரனி அல்பானீஸ் முறைப்படி பதவியேற்றுக் கொண்டுள்ளார்.

கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் லிபரல் கட்சித் தலைவர் ஸ்கொட் மொரிசன் மற்றும் தொழிலாளர் கட்சித் தலைவர் அன்ரனி அல்பானீஸ் ஆகியோர் இடையே கடும் போட்டி நிலவியது. அதில் அதிக இடங்களைக் கைப்பற்றிய அன்ரனி அல்பானீஸ் பிரதமராகத் தெரிவானார். இந்த நிலையில் புதிய பிரதமராக அன்ரனி அல்பானீஸ் முறைப்படி கேன்பர்ரா நகரில் உள்ள அரசு இல்லத்தில் நேற்று திங்கட்கிழமை பதவியேற்றுக் கொண்டார். இவர் அவுஸ்திரேலியாவின் 31ஆவது பிரதமர் ஆவார்.

இதேவேளை அமெரிக்க அதிபர் ஜோ பைடன், தொலைபேசி ஊடாக அன்ரனி அல்பானீஸை தொடர்புகொண்டு வாழ்த்துத் தெரிவித்துள்ளார். (ச-இ)

# ‘நாங்கள் கட்டாயப்படுத்தப்பட்டோம்’

## ஆப்கான் பெண் செய்தியாளர்கள் வேதனை



காபூல்.மே 24

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் உத்தரவை ஏற்று பெண் நிருபர்கள் தங்கள் முகத்தை மூடியபடியே செய்தி வழங்கியுள்ளனர்.

இதுகுறித்து அங்குள்ள பெண் செய்தி வாசிப்பாளர்கள் தெரிவிக்கையில், “ நாங்கள் முகத்தை மறைக்கும் முடிவை எதிர்த்தோம். ஆனால் முகத்தை மறைக்காத செய்தி வாசிப்பாளர்கள் வேறு பணிக்கு மாற்றப்படுவார்கள் அல்லது பணிநீக்கம் செய்யப்படுவார்கள் என்று கூறப்பட்டது. கட்டாயப்படுத்தியதன் காரணமாகவே நாங்கள் ஒப்புக்கொண்டுள்ளோம்" என்றனர்.

இதற்கு தலிபான்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளதுடன் உத்தரவை மீறுபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளனர். (ச)



உக்ரைன்-ரஷ்ய மோதலில் ரஷ்யப்படைகளால் உக்ரைனின் தெற்கு துறைமுக நகரும் அந்த நாட்டின் அதிமுக்கியமான நகருமான மரியுபோல் முற்றாக சிதைந்து அழிக்கப்பட்ட நிலையில் அது தொடர்பான ஒளிப்படங்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மன். கடற்கரைப் பகுதியில் சிரமதானம் முன்னெடுப்பு

மன்னார், மே 24
மன்னார் பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட தாழ்வுபாடு தொடக்கம் நடுக்குடா வரையான கடற்கரைப் பகுதியில் தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தால் நேற்றுமுன்தினம் சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது.
இதன்போது கடற்கரைப் பகுதியில் காணப்பட்ட ஏராளமான பிளாஸ்ரிக் போத்தல்கள் அகற்றப்பட்டன.
வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வீ.எஸ்.சிவகரன் தலைமையில் தாழ்வுபாடு பங்குத்தந்தை அருட்பணி எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார், இளையோர், சிறுவர்கள் எனப் பலர் இணைந்து சிரமதானத்தில் ஈடுபட்டனர். (ம-14,60)

## மன்னார் மெசிடோ நிறுவனத்தால் மருந்துப் பொருள்கள் கையளிப்பு




மன்னார், மே 24
மன்னார் மெசிடோ நிறுவனத்தால் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்குத் தேவையான ஒரு தொகுதி மருந்துப் பொருள்கள் நேற்றுக் கையளிக்கப்பட்டன.
மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ, மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதனிடம் இந்த அத்தியாவசிய மருத்துவப் பொருள்களைக் கையளித்தார்.
நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மருத்துவமனைகளில் மருந்துப் பொருள்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் கோரிக்கைக்கு அமைய இவை கையளிக்கப்பட்டன. (ச-213)

## சொற்பொழிவு

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.
சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் தலைமையுரையை ஆலயத்தின் பரிபாலன சபைத்தலைவர் த.சோதிலிங்கமும் சிறப்புச்சொற்பொழிவை 'சைவ வாழ்வு' என்ற கருப்பொருளில் சைவப்புலவர் கு.சுமூகலிங்கமும் ஆற்றுவர்.

⅄⅄⅄

யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூசை நிகழ்வும்' என்ற தொடரின் 21 ஆவது சொற்பொழிவு நிகழ்வு நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பகவிநாயகர் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.
நாவலர் குருபூசை, தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து, 'நாவலர் பெருமானின் கல்விப்பணி' என்ற கருப்பொருளில் இளம்சைவப்புலவர் ச.நவநீதன் சிறப்புச் சொற்பொழிவை ஆற்றவுள்ளார். (ம-14)



## திருக்குறளை முதன்மைப்படுத்தி ஹற்றனில் திருமணச் சடங்கு

கொழும்பு.மே 24
திருவள்ளுவரையும், திருக்குறளையும் முன்னிலைப்படுத்தி திருமண நிகழ்வொன்று ஹற்றனில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
வழமையான திருமணச் சடங்குகள் நிறைவுற்றதன் பின்னர், திருக்குறள் வழி திருமண நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் திருக்குறள்பாக்கள் ஓதப்பட்டன, தம்பதியினர் திருக்குறள் வழியில் திருமண பந்தத்தில் இணைவது குறித்த உறுதிமொழிகளையும் எடுத்தனர். (க-இ)

## துரைரெட்ணசிங்கத்தின் ஓராண்டு நினைவஞ்சலி



திருகோணமலை, மே 24
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கத்தின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.
இதன்போது அவரின் உருவப்படத்துக்கு மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது. அதன்பின்னர் அஞ்சலி உரைகளும் நிகழ்த்தப்பட்டன. மேலும் அவர் நினைவாக அச்சிடப்பட்ட 'தகைசால் பெரியோன்' நூலும் வெளியிடப்பட்டது.
துரைரெட்ணசிங்கத்தின் குடும்பத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.சிறீதரன், த.கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சர்கள், மதகுருமார்கள் உள்ளிட்ட பல பிரமுகர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ம-14,6)

## பரீட்சை நிலையங்களுக்கு உச்சக்கட்டப் பாதுகாப்பு!

கொழும்பு, மே 24
க.பொ.த சாதாரண தர பரீட்சை நிலையங்களுக்கு அதிகபட்ச பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
வினாத்தாள் மற்றும் விடைத்தாள்கள் பரீட்சை நிலையங்களுக்குக் கொண்டுவரப்படும்போதும் கொண்டு செல்லப்படும் போதும் வழக்கமாக வழங்கப்படும் பொலிஸ் ரோந்து நடவடிக்கையும் இம்முறை பலப்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம)

## சாதாரணதர பரீட்சைக்கு 15 கைதிகள் தோற்றினர்

கொழும்பு, மே 24
இந்த வருட க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு 15 கைதிகள் தோற்றியுள்ளனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இதன்படி, வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து ஒரு கைதியும், புதிய மெகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறப்புக் கைதிகள் நால்வரும், வட்டரெக்க சிறைச்சாலைப் பாடசாலையில் உள்ள 10 சிறுவர் குற்றவாளிகள் என 15 கைதிகள் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். (ம)



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் பசுமைப்புரட்சித் திட்டத்தின் மூன்றாம் கட்டம் சுழிபுரத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் சுழிபுரம் வட்டார உறுப்பினரின் ஒழுங்கமைப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மகளிர் அணித்தலைவி திருமதி வாசுகி சுதாகரின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப்பேச்சாளர் க.சுகாஸ் பசுமைப் புரட்சித் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். (ச-20)



தமிழ் மன்னன் சங்கிலியனின் சிராத்த நிகழ்வு, சிவ [illegible] முறைப்படி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நேற்று நடத்தப்பட்டது. (க-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மோ.சைக்கிள்- பஸ் விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்

சாவகச்சேரி, மே 24

மோட்டார் சைக்கிள்- பஸ் விபத்தில் இருவர் படு காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்து சாவகச்சேரி நுணாவில் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை பின்னால் சென்ற தனியார் பஸ் மோதியதிலே இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அத்துடன் பஸ் நடத்துநருக்கும் சிறுகாயம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-14-20-9)

## தவிசாளர், செயலாளர்களுக்கு ஹற்றனில் பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், மே 24

வடக்கு மாகாண உள்ளூராட்சிசபைகளில் பணியாற்றும் 55 வயதுக்குட்பட்ட தவிசாளர்கள், செயலாளர்களுக்கான விசேட பயிற்சிப்பட்டறை எதிர்வரும் ஜூன் மாதம் 7, 8, 9, 10ஆம் திகதிகளில் ஹற்றன் கித்துல்கல ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

வடமாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட நிறுவனத்தின் சீ.டி.எல்.ஜி திட்டத்தின் கீழ் இலங்கை மன்றக் கல்லூரி ஊடாக பயிற்சிப்பட்டறை நடத்தப்படவுள்ளது.

இதற்கமைய பயிற்சிப்பட்டறையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது பெயர், பதவி, உள்ளூராட்சி மன்றம் போன்றவற்றைக் குறிப்பிட்டு நாளை 25ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார். (ம-14-9)

# கச்சதீவை குத்தகைக்கு இந்தியா எடுக்கக்கூடாது

### செல்வம் எம்.பி. தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், மே 24**

**கச்சதீவை குத்தகைக்கு இந்தியா எடுக்க இருப்பதை மீள் பரிசீலனை செய்ய வேண்டும். அவ்வாறில்லாவிடின் எமது மீனவர்கள் அந்தப் பகுதிக்குச் சென்று மீன்பிடிப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லாது போகும் நிலை உருவாகும் இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**

மன்னாரில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, வன்னி மாவட்டத்தில் மண்ணெணெய் இல்லாமையால் கடற்தொழிலாளர்கள் பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அவர்களின் தொழில் பெரிய அளவில் பாதிப்பு அடைந்துள்ளது. இது தொடர்பாக நாங்கள் நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்துள்ளோம். முதன்மை அடிப்படையில் விவசாயிகளுக்கும் மீனவர்களுக்கும் எரிபொருள் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம்.

தற்பொழுது உள்ள அமைச்சர் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்திருந்தார். இருந்தும் இன்னும் அவை சரியான முறையில் கிடைக்கவில்லை என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இது தொடர்பாக நாங்கள் பிரதமர் மற்றும்அமைச்சருடனும்தொடர்ந்து வலியுறுத்த இருக்கின்றோம். கச்சதீவை குத்தகைக்கு இந்தியா எடுக்க இருப்பதை மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும். அவ்வாறு நடந்தால் எமது மீனவர்கள் அந்த பகுதிக்குச் சென்று மீன்பிடிப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லாது போகும் நிலை உருவாகும். ஜனாதிபதிக்கு அதிகாரங்கள் குறைக்கப்படுகின்ற அதேவேளையில் மாவட்ட ரீதியாக ஜனாதிபதியின் செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஆளுநர்களின் அதிகாரங்களும் குறைக்கப்பட வேண்டும் என அரசாங்கத்திடம் பரிந்துரை செய்யவிருக்கின்றோம் -என்றார். (எ-60)

## வங்கிகளுக்கு இன்று கோப் குழு அழைப்பு

கொழும்பு, மே 24

இலங்கை மத்திய வங்கி, இலங்கை வங்கி என்பனவற்றை இன்று முன்னிலையாகுமாறு அரசாங்க நிதி பற்றிய குழு (கோப் குழு) அறிவுறுத்தியுள்ளது.

வங்கிகள் தொடர்பான கணக்காய்வு அறிக்கை மற்றும் அவற்றின் தற்போதைய செயலாற்றுகை குறித்து ஆராயும் நோக்கிலேயே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (க-இ)

## தவறான முடிவெடுத்து நபரொருவர் உயிரிழப்பு

கொழும்பு, மே 24

மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவந்த நபரொருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்தார்.

வவுணதீவு நாவற்காடு பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய சிவலிங்கம் தட்சணாமூர்த்தி என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் மனநோய் காரணமாக சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# க.பொ.த. சாதாரணதர பரீட்சை நாடளாவிய ரீதியில் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், மே 24

நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில், பெரும் இடர்களைக் கடந்து 2021ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை நாடளாவிய ரீதியில் நேற்று ஆரம்பமாகியது. 5 இலட்சத்து 17 ஆயிரத்து 496 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுகின்ற நிலையில், 3 ஆயிரத்து 844 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறுகின்றது.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாண மாவட்டத்திலும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையை எதிர்கொள்வதற்காக மாணவர்கள் பரீட்சை நிலையங்களுக்கு நேரத்துடன் வருகை தந்திருந்தனர். சுகாதார வழிகாட்டல்களுக்கு இணங்க பரீட்சை நிலையங்களும் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

**வவுனியா**

வவுனியா மாவட்டத்தில் 4 ஆயிரத்து 956 மாணவர்கள் பரீட்சை எழுதத் தகுதி பெற்றுள்ளதுடன், 43 பரீட்சை மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 14 இணைப்பு கரரியாலயங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

**மன்னார்**

மன்னார் மாவட்டத்தில் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் ஆர்வத்துடன் பரீட்சை மண்டபங்களுக்குச் சமுகமளித்தனர். மாணவர்கள் சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைவாக பரீட்சைக்குத் தோற்றினர். மாவட்டத்தில் சுமர் 31 பரீட்சை மையங்களில் 3 ஆயிரத்து 642 பரீட்சாத்திகள் பரீட்சை எழுதத் தகுதி பெற்றுள்ளனர்.





**கிளிநொச்சி**

கிளிநொச்சி மாவட்டத்தில் கல்விப்பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சைக்கு 3 ஆயிரத்து 172 பாடசாலைப் பரீட்சார்த்திகளும் [illegible] வெளிவாரிப் பரீட்சார்த்திகளும் தோற்றுகின்றனர். இந்தப் பரீட்சை ஒழுங்குபடுத்தப்பட்ட 37 பரீட்சை நிலையங்களில் நடத்தப்பட்டு வருவதுடன் 10 இணைப்பு நிலையங்களும் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு மாவட்டத்திலும் பரீட்சார்த்திகள் ஆர்வத்துடன் பரீட்சையில் கலந்துகொண்டனர். தொலைதூரத்திலிருந்து வருகைதரும் மாணவர்களின் நலன் கருதி சில சமூகநல ஆர்வலர்களால் மாணவர்களுக்குப் போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருந்தன. (க-110-213-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்கட்டண அதிகரிப்புக்கு ஆணைக்குழு பரிந்துரை!

**கொழும்பு, மே 24**

**மின்னுற்பத்திக்கான கேள்வி அதிகரித்துள்ள பின்னணியில் மின்கட்டணத்தை குறைந்தபட்சமேனும் அதிகரிக்காவிடின் 250 பில்லியன் ரூபா இழப்பை அரசாங்கம் எதிர்கொள்ள நேரிடும். மின்கட்டண அதிகரிப்பு தொடர்பில் மக்களிடம் கருத்துக் கணிப்புக் கோரப்படும் என இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

டொலர் பற்றாக்குறை காரணமாகவே எரிபொருள் கொள்வனவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மின்னுற்பத்திக்குத் தேவையான எரிபொருளைத் தடையின்றி விநியோகிக்க இலங்கை மின்சார சபை உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டதைத் தொடர்ந்து மின்விநியோகத் தடை 3 மணித்தியாலங்கள் அளவு மட்டுப்படுத்தப்பட்டது.

கடந்த காலத்தைக் காட்டிலும் மின்னுற்பத்திக்கான கேள்வி அதிகரித்துள்ளது. மின்கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பான யோசனையை அரசாங்கம் கொள்கை அடிப்படையில் முன்னெடுக்கவேண்டும்.

2014ஆம் ஆண்டுக்குப் பின்னர் மின்கட்டணம் அதிகரிக்கப்படவில்லை. தேசிய மின்னுற்பத்தி கட்டமைப்புக்குப் புதிதாக மின்நிலையங்களும் இணைத்துக் கொள்ளப்படாத காரணத்தால் மின்னுற்பத்தி மற்றும் மின்விநியோகக் கட்டமைப்பு பெரும் சவால்களை எதிர்கொண்டுள்ளது.

மின்கட்டண அதிகரிப்புத் தொடர்பாக அரசாங்கம் கொள்கை ரீதியிலான தீர்மானத்தை விரைவில் முன்னெடுக்க வேண்டும்.

அத்தியாவசியப் பொருள்களின் விலையை நள்ளிரவில் அதிகரிப்பதைப்போன்று மின்கட்டணத்தை நள்ளிரவில் அதிகரிக்க முடியாது. மின்கட்டண அதிகரிப்புத் தொடர்பாகப் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு முறையான பரிந்துரைகளை முன்னெடுக்கும்.

மின்கட்டண அதிகரிப்பு தொடர்பாகப் பொதுமக்களிடம் கருத்துக் கணிப்புக் கோரப்படும்-என்றார். (எ-இ)



## மக்களுக்குத் துரோகம் செய்துவிட்டார் ஹரின்

### முஜிபுர் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 24

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கைகளால் அமைச்சுப் பதவியைப் பெற்று மக்களுக்குப் பெருந் துரோகத்தை ஹரின் பெர்னாண்டோ இழைத்திருக்கிறார். அவரது பொய் வேஷத்தை கோத்தாபய அம்பலப்படுத்தியிருக்கிறார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ முதலில் ஜனாதிபதியுடன் இணக்கப்பாட்டுக்கு வந்து, பதவிப் பிரமாணம் செய்யும் ஒளிப்படங்கள் மற்றும் காணொலியை ஊடகங்களுக்கு வழங்காதிருக்கத் திட்டமிட்டிருந்தார். ஆயினும் ஹரின் வெளியில் வந்து ஊடகங்களில் தன்னைப் பற்றிப் பெருமை பேசியதன் காரணமாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்யும் ஒளிப்படம் மற்றும் காணொலியை ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு ஊடகங்களுக்கு வெளியிட்டு ஹரின் பெர்னாண்டோவின் காற்சட்டையைக் கழற்றி அம்பலப்படுத்தியுள்ளது.

இறுதியில் கோத்தா கோ ஹோம் எனக் கூறியவர்கள், கோத்தாவின் கைகளில் இருந்து நியமனக் கடிதங்களை பெற்றுள்ளனர்- என்றார். (எ-இ)

## ரஷ்யா – உக்ரைன் மோதலால் இலங்கைக்குப் பெரும் பாதிப்பு!

கொழும்பு, மே 24

ரஷ்யா மற்றும் உக்ரைன் போரால் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் அதிகம் தாக்கத்துக்குள்ளாகும் 12 நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஐ.நாவின் ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழு பட்டியலிட்டுள்ள 12 நாடுகளின் பட்டியலிலேயே இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இலங்கையுடன் பாகிஸ்தான், ஆர்மேனியா, கம்போடியா, ஜோர்ஜியா, கஜகஸ்தான், மாலைதீவு, சமோவா, சொலமன் தீவுகள், தஜிகிஸ்தான், வனாட்டு ஆகிய நாடுகள் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

இந்த நாடுகள் தமது பொருளாதாரக் கட்டமைப்பு மற்றும் சூழ்நிலைகள் காரணமாக எரிபொருள்கள் மற்றும் உணவுகளின் விலை அதிகரிப்பு, குறைந்தளவு வெளிநாட்டு நிதி வரவுகள், நிதியியல் செலவு அதிகரிப்புகள் முதலியன காரணமாக மேலும் பாதிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## 95 ரக ஒக்ரேன் பெற்றோல் நாடு முழுவதும் விநியோகம்

கொழும்பு, மே 24

நாடளாவிய ரீதியில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு 95 ரக ஒக்ரேன் பெற்றோல் விநியோகிக்கப்படும் என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இரண்டு கப்பல்களில் இருந்து 95 ரக ஒக்ரேன் பெற்றோல் தரையிறக்கப்பட்டுள்ளது.

இது எதிர்வரும் 6 வாரங்களுக்குப் போதுமானதாக இருக்கும்.

எனவே இன்று முதல் 95 ரக ஒக்ரேன் பெற்றோலை மக்கள் இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)



## வெளிவிவகார அமைச்சின் கடமைகளை நேற்று பொறுப்பேற்றார் அருணி

கொழும்பு, மே 24

வெளிவிவகார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டிருந்த அருணி விஜேவர்தன நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பதவியில் இருந்து அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே விலகியதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே அருணி விஜேவர்தன நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## கடன்கள் வாங்கிக்குவிப்பதை கைவிட்டு விவசாயத்தை வலுப்படுத்த உதவுங்கள்

### வவு. விவசாய சம்மேளனம் வலியுறுத்து

வவுனியா, மே 24

தற்போதைய நெருக்கடியை போக்குவதற்கு விவசாயத்தை வலுப்படுத்தி உற்பத்தியை பெருக்கும் மூலோபாயம் தொடர்பாக அரசாங்கம் சிந்திக்கவேண்டும்.

மாறாக கடன் வாங்குவதைப்பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டிருக்கக்கூடாது என்று வவுனியா மாவட்ட விவசாய சம்மேளனம் வலியுறுத்துள்ளது.

வவுனியாவில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:


நாடு பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றது. இப்போது எரிபொருளுக்காக ஒடிக்கொண்டிருக்கும் மக்கள் எதிர்காலத்தில் உணவுக்காக அலையும் நிலைமை தோன்றவுள்ளது. கடந்த காலங்களில் அரசாங்கங்கள் செய்த தவறால் இப்போது இந்த நிலைமை தோன்றியுள்ளது.

எந்த நாட்டில் உற்பத்திசெய்யக் கூடிய உருளைக் கிழங்கு, வெங்காயம் போன்றவற்றையே இறக்குமதி செய்யவேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.




பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வெளிநாடுகளிடம் கடன் வாங்குகின்றார்களே தவிர, விவசாயத்தை வலுப்படுத்தி உள்ளூர் உற்பத்தியை பெருக்குவதற்கான வழிகாட்டல்களை யாரும் வழங்கவில்லை. விவசாயிகள் தோட்டச் செய்கைக்கான எரிபொருள் இல்லாமல் சிரமப்படுகிறார்கள். விவசாயிகளுக்கான எரிபொருளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும்- என்றனர். (எ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம், புங்குடுதீவு - இறுப்பிட்டி பெரிய புலம் வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் கொடியேற்றத் திருவிழா நேற்று சிறப்பாக இடம்பெற்றது. (ம-14,20)

## சஜித்–அலகா சிங் சந்தித்துப் பேச்சு

கொழும்பு, மே 24

உலக சுகாதார நிறுவனத்தின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப்பிரதிநிதி அலகா சிங் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை நேற்றுக் கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இலங்கையின் சுகாதாரத்துறையை மேம்படுத்துவதற்கு வலுவான ஆதரவை வழங்கவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் கோரினார் என்றும், நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்துப் பொருள்களின் தட்டுப்பாடு மற்றும் அதற்கான தீர்வு தொடர்பில் இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)





# வடக்கில் நேற்றும் பரவலாக பெற்றோலுக்காக நீள்வரிசை!

## பாதியில் திருப்பி அனுப்பப்பட்ட சம்பவங்களும் பல நிரப்பு நிலையங்களில் பதிவாகின

**யாழ்ப்பாணம், மே 24**

**வடக்கு மாகாணத்தில் நேற்றும் பரவலாக பெற்றோலுக்கு மக்கள் மணித்தியாலக் கணக்காக நீண்ட வரிசைகளில் காத்திருந்ததை அவதானிக்க முடிந்தது.**

நாடெங்கிலும் ஏற்பட்ட பெற்றோல் தட்டுப்பாட்டை அடுத்து நேற்று முன்தினமும் நேற்றும் பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் வழங்கப்பட்டது. இந்த நிலையில் இந்த இரு நாள்களிலும் பெற்றோலுக்காக மக்கள் நீண்ட வரிசைகளில் காத்துக்கிடந்தனர். 2 மணிநேரத்துக்கும் கூடுதலான அளவு நேரத்தை வரிசைகளில் செலவிட்டே பெற்றோலைக் கொள்வனவு செய்யக்கூடிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். அதிலும், பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 500 ரூபாவுக்கும், ஆயிரம் ரூபாவுக்கும் மட்டுமே மோட்டார் சைக்களுக்கு பெற்றோல் வழங்கப்பட்டது.

நீண்ட வரிசையில் காத்துக்கிடந்த போதிலும் எரிபொருள் முடிந்துவிட்டது என்றுகூறி மக்கள் திருப்பி அனுப்பப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதனால் மக்கள் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையங்களில் முகாமையாளர்களுடன் மோதல் போக்கிலும் ஈடுபட்டு, பின்னர் பொலிஸார் அழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்படுத்தப்பட்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளன. (ம-17)

# பிரதமர் ரணில் தலைமையில் நாட்டின் பொருளாதாரம் மீளும்

## அசாத் சாலி தெரிவிப்பு



கொழும்பு, மே 24

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம், நாட்டின் பொருளாதார பிரச்சினைக்குத் தீர்வுகாணும் என்ற நம்பிக்கையுள்ளது. எனவே புலம்பெயர் இலங்கையர்களும் உதவ முன்வரவேண்டும் என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அந்நியச் செலாவணி வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியை சரிசெய்வதற்கு, நாட்டுக்குள் அதிகளவு டொலர் வரவேண்டும். எனவே புலம்பெயர் இலங்கையர்கள், வெளிநாடுகளில் இதைச் சேகரித்து இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பும் முயற்சிகளில் இறங்குவது அவசியம். சகல கட்சிகளின் தலைவர்களும் ரணில் தலைமையிலான அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க முன்வந்திருப்பதால், பொருளாதார மேம்பாடுகளை அடைந்துகொள்ளும் வழிகள் விரைவில் திறக்கப் படலாம். உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிப்பதற்குத் தேவையான சுற்றுச்சூழலை நாட்டில் கொண்டுவரும் பொறுப்பையும், சுற்றுலாப் பயணிகளை அதிகளவு உள்ளீர்க்கும் சூழலையும் இளைஞர்களே ஏற்படுத்த வேண்டும் - என்றார். (க-இ)



முல்லைத்தீவு மாவட்ட சவாரிச் சங்க அனுசரணையில், விசுவமடு தொட்டியடி சவாரித்திடலில் மாட்டுவண்டில் சவாரிப்போட்டி நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. (க-21)

வளர்க மெய்ஞானம் வளர்க சமாதானம்





உன்னை நம்பு

தென்கயிலை உலக சமாதான ஆலயம்

50/9, ஓம் நமசிவாய வீதி, வைமன் தெரு, யாழ்ப்பாணம்.

மகாசக்தி யோகம்

(முழுநல வாழ்விற்கான அற்புதப் பயிற்சிகள்)

இலங்யில் முதல் தடவையாக இந்தியாவின் தென்கயிலை உலக சமாதான ஆலயத்தின் மூலம் இலவச யோகா தியானப் பயிற்சிகள்

இவ் யோகாப் பயிற்சிகள் மூன்று நாட்கள் இந்தியாவில் இருந்து வருகைதரும் ஞானாசிரியர்களினால் வழங்கப்படவுள்ளதுடன் அதற்கான அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் நிறுவனர், உலக அமைதி தூதுவர் குருமகான் அவர்களால் வழங்கப்படவுள்ளது.

இடம்:- கலாமுற்றம், இலக்கம் 15, றக்காவீதி, யாழ்ப்பாணம்
(புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் அருகில்)

திகதி:- 27.05.2022 முதல் 29.05.2022 வரை 3 நாட்கள்

நேரம்:- காலை 7.30 மணி முதல் மாலை 6.30 மணி வரை

பயிற்சி வழங்கும் ஆசிரியர்: மெய்ஞானாசிரியர் K.S. சுந்தரராமன்
பொதுச்செயலர், உலக சமாதான அறக்கட்டளை, இந்தியா

மதிய உணவு, சிற்றுண்டிகள், பயிற்சி அனைத்தும் முற்றிலும் இலவசம்
(அனுமதி மட்டுப்படுத்தப்பட்டு உள்ளமையினால் மே 26 ஆம் திகதிக்கு முன் நேரில் அல்லது தொலைபேசி ஊடாகவோ பதிவு செய்யவும்)

தொடர்புக்கு:-
தென்கயிலை உலக சமாதான ஆலயம், இலங்கை கிளை,
50/9, ஓம் நமசிவாய வீதி, வைமன் தெரு,
யாழ்ப்பாணம்

தொலைபேசி இலக்கம்:-
ஆலயம்: 0212211209,/ 076 310 0224
ஞானாசிரியர் ப.அச்சுதராஜா 0777607026

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலோசனைகள் வழங்கியும் செயற்படவில்லை தேசபந்து

## பொலிஸ்மா அதிபர் வாக்குமூலம்

கொழும்பு, மே 24

காலிமுகத்திடல் மற்றும் அலரி மாளிகை அருகில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக எழுத்து மூலத்திலும், வாய்மூலமாகவும் வழங்கிய ஆலோசனைகளை பொறுப்பான உயர் அதிகாரியாகச் செயற்பட்ட மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் அதிபர் தேசபந்து தென்னக்கோன் பற்றாதிருந்தார் என்று பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்ன தெரிவித்துள்ளார். குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு வழங்கிய வாக்குமூலத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகங்களை முன்னெடுக்க வேண்டாம் என ஒருபோதும் ஆலோசனை வழங்கவில்லை. வன்முறைகள் ஏற்படலாம் என்பது தொடர்பில் மே 8ஆம் திகதி உளவுத் தகவல்கள் கிடைத்தன.

அலரிமாளிகைக்கு வருவோரை எந்தக் காரணத்துக்காகவும் அலரி மாளிகையின் முன்பக்க மாகமோ, அமைதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் பக்கமோ அல்லது காலிமுகத்திடல் பக்கமோ செல்வதை அனுமதிக்கவேண்டாம் எனவும், அதற்கு மேலதிகமாக அரசாங்க எதிர்ப்புக்களுடன் காணப்படும் மக்கள் இருக்கும் பகுதிகளுக்கு செல்வதையும் அனுமதிக்க வேண்டாம் எனவும் எழுத்து மூலமும், வாய் மொழி மூலமும் மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டது.

அவற்றை மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் முன்னெடுத்திருக்க வில்லை.

குறைந்த பட்சம், அரசாங்க ஆதரவாளர்களின் பேரணியைத் தடுக்க நீதிமன்ற உத்தரவொன்றைக் கூட அவர் பெற முயன்றிருக்கவில்லை என்று பொலிஸ் மா அதிபர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார் என்று அறியமுடிகின்றது.

மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சில அரசியல்வாதிகளுடன் தொடர்புபட்டு, அவர்களின் தேவைக்கு அமைய செயற்பட்டுள்ளார் என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில், அவை தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (எ-இ)


**GOLDEN OPPORTUNITY FOR A**

PROSPLROUS AND PRESTIGIOUS CAREER



- A nationally established UK organisation is seeking to recruit a particular type of candidates to maintain their Global Database.
- A compulsive attitude to details and accuracy with an analytical mind are more important than a University degree. Employment will be confirmed after an initial 3 months of training.
- Successful candidates will be working locally not far away from your respective residences.

**Please forward your CV to:**
**joseph.vilvaraj@gmail.com**


## 12ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 21 . 03 . 1937



உதிர்வு 06 . 06 . 2010

**அமரர் சந்திரசேகரம் நடேசபிள்ளை**

(ஓய்வுநிலை அதிபர் – யா/சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்)

நினைவுகளை மட்டும் எமக்களித்து
நீண்ட தூரம் பயணித்தாலும்
உறவுகளுக்குள் ஓர் உயிரோட்டம்
மரணம் உடலுக்கு மட்டுமேயன்றி உயிருக்கல்ல
என்றும் உங்களின் நினைவுகளுடன்

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி

குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள் அதிபரும் தற்போதைய நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளருமாகிய

**திரு. F.X அன்ரன்**

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த அதிர்ச்சியும், துயரும் அடைகின்றோம் அன்னாரின் குடும்பத்தவர்க்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/ மிருசுவில் றோ.க.த.க பாடசாலை,**
**மிருசுவில்.**

(CR 8439) (3/6)

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் மாபிள் பதித்து தரப்படும். **ஒரு சதுர அடி - 80 ரூபாய் பூச்சுவேலை, கட்டு வேலைகளும் செய்து தரப்படும்.** (CS 901) (3/6) **077 334 1281**

## விற்பனைக்கு

T.V 49`` பாவித்தது (சிமாட் T.V)
விற்பனைக்கு SAMSUNG (CS 44806) (3/6)

தொடர்பு : **076 166 3620**

## வேலையாள்கள் தேவை

வன்னிவிளாங்குளம். மாங்குளத்தில் உள்ள பண்ணைக்கு (C.C.R.பாம்).
வேலையாட்கள் தேவை. குடும்பமாக தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவர்கள் விரும்பத்தக்கது. (CR 36009) 3/6)

தொடர்புக்கு:- **077 196 6670.**

### திருவிழாக்கான தற்காலிக வியாபார நிலைய

## ஏல விற்பனை

### வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய அலங்காரத்திருவிழா - 2022

மேற்படி எமது ஆலயத்தில் இந்த வருடம் 2022 அலங்காரத்திருவிழா உற்சவம் 13.06.2022 இல் இருந்து ஆரம்பித்து 26.06.2022 வரை நடைபெறவிருப்பதால் தற்காலிக வியாபார அனுமதிக்கான விலைமனு கோரல் 29.05.2022 (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 10.00 மணிக்கு ஏலவிற்பனை ஆலயத்தில் நடைபெறும் என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இந்த தற்காலிக வியபார அனுமதியானது இவ்வருடம் 2022 அலங்கார உற்சவ காலத்தில் மட்டும் செல்லுபடியாகும்.

**குறிப்பு – ஏலவிற்பனையின் 50% பணத்தொகையினை முற்பணமாக 13.06.2022 முன்னர் ஆலய கருமபீடத்தில் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளவும். மிகுதி 50% 20.06.2022 க்கு முன்னர் செலுத்தப்படுமிடத்து தற்காலிக வியாபார அனுமதிப்பத்திரம் முழுமையா செல்லுபடியாகும்**

எடுத்துவர வேண்டிய ஆவணங்கள்

1. அதன் இரண்டு ஆள் அடையாளத்தை உறுதிப்படத்தக்கூடிய அட்டையும், பிரதியும். (தேசியஅடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் மட்டும்)
2. வதிவிட முகவரியை உறுதிப்படுத்திய ஆவணமும் அதன் இரண்டு பிரதியும்
3. கொரோனா தடுப்பூசி பெற்றுக்கொண்டமைக்கான அட்டையும் அதன் இரண்டு பிரதியும்

**பரிபாலன சபையினர்.**

THE HALO TRUST


450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org


## வாகனங்களை குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரல்

## (Quotation for vehicle hiring on contract basis)

ஹலோ ட்றஸ்ட் ஆனது ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 25 நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட் களை அகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது.

ஹலோ ட்றஸ்டின் எதிர்கால நடவடிக்கைகளுக்காக வாகனங்கள் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஹலோ ட்றஸ்டின் பணிகளுக்காக மிதிவெடி அகற்றும் அணிகளை மிதிவெடித் தளத்திற்கு நகர்த்திச் செல்வதும் அத்துடன் ஆபத்துகளின் போது அம்புலன்ஸ் சேவை வழங்குவதற்கும் எமக்கு வாகனங்கள் தேவைப்படுகின்றன இதற்காக பின்வரும் வாகன வகைகள் கோரப்படுகின்றன.

சிங்கிள் கப் ரக வாகனம் ( மகேந்திரா பொலறோ அல்லது டாடா ஜோடா அல்லது செனோன்.) வெள்ளைக் கலர் விரும்பத்தக்கது. மற்றும் முழுக் காப்புறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் இரு பக்க பின் இருக்கைகள் பொருத்தப்பட்டு இருப்பதுடன் வாகன மேற் கூடாரமும் இருத்தல் வேண்டும். விலை கோரும் படிவங்களை எதிர்வரும் 29 மே 2022 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**மனிதவள முகாமையாளர்**
**த ஹலோ ட்றஸ்ற் - இலங்கை**
**450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.**

CR 36010) (3/6

## பெயர் மாற்றம்

No. 20, சென்பற்றிக்ஸ் வீதியில் வசிக்கும் **தேவதாசன் விமலா** ஆகிய நான் எனது பெயரை **தேவதாசன் எமல்டா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **தேவதாசன் எமல்டா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிசக் குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

**தேவதாசன் எமல்டா**

(CS 44801) (3.6)

## கண்ணீர் அஞ்சலி



மலர்வு 19.07.1962 உதிர்வு 20.05.2022

எமது பாடசாலையின் முன்னாள் அதிபரும், நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளருமாகிய

**அமரர்.F.X.அன்ரன்**

அவர்கள் 20.05.2022 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்**
**யா/ நாவாந்துறை றோ.க.**
**வித்தியாலயம்**

(CR 8439) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருள்...

எரிபொருள் விநியோகத்தை தற்காலிகமாக இடைநிறுத்த அனுமதிக்குமாறு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் பல இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன. நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையில் தமது எரிபொருள் நிரப்பு நிலையங்களைப் பராமரிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக அவை சுட்டிக்காட்டியுள்ளன. எரிபொருள் பெற்றுக்கொள்ள வரும் மக்கள், மூர்க்கமாக நடந்து கொள்வதால் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. போதுமானளவு எரிபொருள் கிடைக்கும் வரை எரிபொருள் விநியோகத்தை இடைநிறுத்த நிரப்பு நிலையங்கள் அனுமதி கோரியுள்ளன. (அ-ஒ-இ)

## ரணிலின்...

டக்ளஸ் தேவானந்தா. அவருக்கு கடற்றொழில் அமைச்சே மீண்டும் வழங்கப்பட்டுள்ளது. அவருடன் மேலும் 5பேர் அமைச்சுப் பதவிகளை ஏற்றுள்ளதுடன், ஏற்கனவே அமைச்சுப் பொறுப்பை ஏற்ற இருவருக்கு மேலதிக அமைச்சுப் பொறுப்புக்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம், டக்ளஸ் தேவானந்தா கடற்றொழில் அமைச்சராகவும், பந்துல குணவர்த்தன போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், வெகுஜன ஊடக அமைச்சராகவும், மஹிந்த அமரவீர கமத்தொழில், வனஜீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சராகவும், விதுர விக்கிரமநாயக்க புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சராகவும், அஹமட் நசீர் சுற்றாடல் அமைச்சராகவும், ரொஷான் ரணசிங்ஹ நீர்ப்பாசன, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சராகவும் புதிதாகப் பதவியேற்றுள்ளனர்.

ஏற்கனவே சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்ட கெஹலிய ரம்புக்வெலவுக்கு நீர் வழங்கல் அமைச்சு பொறுப்பு மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று பெருந்தோட்ட அமைச்சராக நியமிக்கப்பட்ட ரமேஷ்பத்திரணவுக்கு கைத்தொழில் அமைச்சுப் பொறுப்பு மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

## பவுஸர்கள்...

நாட்டின் பல்வேறு பிரதேசங்களுக்கும் எரிபொருளை ஏற்றிச் சென்ற பவுஸர்களை பொதுமக்கள் முற்றுகையிட்டு மறித்தமையால் சிலாபம் நகரப் பகுதியில் நேற்று முன்னிரவு பெரும் பதற்றம் நிலவியது. இந்தச் செய்தி அச்சுக்குப் போகும் வரையில் அங்கு பதற்றமான சூழல் நிலவுவதுடன் வடக்கு மாகாணம் உட்பட பல இடங்களுக்குச் செல்ல வேண்டிய எரிபொருள் பவுஸர்கள் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளன. (ஒ-5)

## 40ஆயிரம்...

இந்தியாவிடமிருந்து எரிபொருளுக்காக ஒதுக்கப்பட்ட கடனுதவித்திட்டத்தின்கீழ் 40 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல், கொழும்பு துறைமுகத்தை நேற்று வந்தடைந்துள்ளதாக இலங்கைக்கான இந்தியத் தூதரகம் தெரிவித்தது. (ஒ-இ)

# ஆறு பேருக்கும் எப்போது விடுதலை?


முருகன் பேரறிவாளன் சாந்தன்


நளினி ரவிச்சந்திரன் ராபர்ட் பயஸ் ஜெயக்குமார்

**காசி விஸ்வநாதன்**

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டு தண்டனைக் காலத்தை அனுபவித்து வந்த ஏழு பேரில் பேரறிவாளனை உச்ச நீதிமன்றம் தற்போது விடுவித்துள்ளது. மீதமுள்ள நளினி, சாந்தன், முருகன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் ஆகியோர் தற்போது சிறையில் உள்ளனர்.

சிறையில் இருந்த ஏழு பேரும் ஒரே குற்றத்துக்காக தண்டிக்கப்பட்டிருந்த நிலையில், பேரறிவாளனின் விடுதலையை அடுத்து இவர்களது நிலை என்ன என்ற கேள்வி எழுந்துள்ளது. பேரறிவாளன் விடுதலைக்குப் பிறகு, செய்தியாளர்களைச் சந்தித்த தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினிடம் இந்தக் கேள்வி கேட்கப்பட்டபோது, "தீர்ப்பின் முழு விவரமும் வரவில்லை. அது வந்த பிறகு சட்ட வல்லுநர்களைக் கலந்தாலோசித்து முடிவெடுப்போம்" என்று தெரிவித்தார்.

முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரின் தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து 2014 பெப்ரவரி 18ஆம் திகதி இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதற்கு அடுத்த நாளே ஜெயலலிதா தலைமையிலான தமிழ்நாடு அமைச்சரவைகூடி, சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி, ராபர்ட் பயஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் ஆகிய ஏழு பேரையும் விடுவிக்க முடிவு செய்தது.

குற்ற விசாரணைச் சட்டம் 432 இல் மாநில அரசுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி இவர்களை விடுவிக்க முடிவெடுத்து இருப்பதாகவும் இது தொடர்பாக மத்திய அரசு மூன்று நாள்களுக்குள் தனது கருத்தைத் தெரிவிக்கவில்லையென்றால், அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்றும் அறிவித்தார் ஜெயலலிதா.

ஆனால், இந்த முடிவை எதிர்த்து மத்திய அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தை அணுகி தடை ஆணை பெறப்பட்டது. இந்த வழக்கில் 2018 செப்ரெம்பர் 6ஆம் திகதி உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதில் குற்ற விசாரணைச் சட்டம் 432 இன் கீழ் விடுவிக்க முடிவெடுத்தது தவறு என்றும் விரும்பினால் 161 ஆவது பிரிவின் கீழ் விடுவிக்கலாம் என்றும் நீதிமன்றம் கூறியது.

இதற்கு மூன்று நாள்கள் கழித்து செப்ரெம்பர் 9ஆம் திகதி கூடிய எடப்பாடி கே. பழனிச்சாமி தலைமையிலான அமைச்சரவை 161 ஆவது பிரிவின் கீழ் இந்த ஏழு பேரையும் விடுவிப்பதாக பரிந்துரைத்து, அதை செப்ரெம்பர் 11ஆம் திகதி ஆளுநருக்கு அனுப்பி வைத்தது. இந்த விவகாரத்தில் ஆளுநர் முடிவேதும் எடுக்கவில்லை.

இந்த நிலையில், சில தகவல்களைக் கேட்டு பேரறிவாளன் தடா நீதிமன்றத்தில் ஒரு மனுவைத் தாக்கல் செய்தார். இதற்கு நீதிமன்றம் மறுக்கவே, உச்ச நீதிமன்றத்தில் அதை வழக்காகத் தொடுத்தார். அதில் இடையீட்டு மனுவாக தனது விடுதலையையும் கோரினார்.

அந்த வழக்கில்தான் உச்ச நீதிமன்றம் மே 18 ஆம் திகதியன்று பேரறிவாளனை விடுவித்துத் தீர்ப்பளித்துள்ளது.

### ஆறு பேரையும் விடுவிக்க இந்தத் தீர்ப்பே போதுமா?

இந்த நிலையில், உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு மீதமுள்ள ஆறு பேருக்கும் பொருந்துமா, அப்படிப் பொருந்தினால், தமிழ்நாடு அரசே அவர்களை விடுவித்து விடலாமா அல்லது ஆறு பேரும் மீண்டும் உச்ச நீதிமன்றத்தை அணுகி நிவாரணம் பெற வேண்டுமா என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

"இந்த ஆறு பேரையும் விடுவிக்க உச்ச நீதிமன்றம் தற்போது அளித்துள்ள தீர்ப்பே போதுமானது. இந்தத் தீர்ப்புக்குப் பிறகு மாநில அரசு முடிவெடுப்பதை ஆளுநர் தடுக்க முடியாது. தற்போது நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பில், மாருராம் வழக்கின் தீர்ப்பை நீதிபதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்தத் தீர்ப்பு 1980ல் ஐந்து நீதிபதிகளால் வழங்கப்பட்டது.

அந்தத் தீர்ப்பின்படி மாநில அரசின் முடிவை ஆளுநர், குடியரசுத் தலைவருக்கு அனுப்ப வேண்டியதில்லை. இரண்டும் வெவ்வேறு அதிகாரங்கள் என்பதை அந்தத் தீர்ப்பில் நீதிமன்றம் உறுதிப்படுத்தியிருக்கிறது. ஆகவே அமைச்சரவையின் முடிவுக்கு ஆளுநர் கட்டுப்பட்டவரா என்ற கேள்விக்கு நீதிமன்றம் விடையளித்துவிட்டது. ஆளுநர் அமைச்சரவையின் முடிவுக்குக் கட்டுப்பட்டவர்தான்; அமைச்சரவையின் முடிவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பியதே தவறு என நீதிமன்றம் கூறிவிட்டது.

அடுத்ததாக விவாதிக்க வேண்டிய விவகாரம், பேரறிவாளன் வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்ற ஆறு பேருக்கும் பொருந்துமா என்பது. நிச்சயமாகப் பொருந்தும். ஒரு வழக்கில் ஆறு, ஏழு பேர் சம்பந்தப்பட்டிருக்கும் நிலையில், ஒரே ஒருவர் மட்டுமே நீதிமன்றத்தை அணுகி நிவாரணம் பெற்றால் அந்த நிவாரணம் மற்ற ஆறு பேருக்குமே பொருந்தும்.

"தமிழ்நாடு அமைச்சரவை ஏழு பேரையும் விடுவிக்க முடிவுசெய்துதான் பரிந்துரையை அனுப்பியது. ஆளுநர் முடிவெடுக்காத நிலையில் பேரறிவாளன் நீதிமன்றத்தை நாடி நிவாரணத்தைப் பெற்றிருக்கிறார். ஆகவே அந்த நிவாரணம் மற்ற ஆறு பேருக்குமே பொருந்தும். ஏழு பேரையும் விடுவிக்க அமைச்சரவை முடிவெடுத்த நிலையில், ஒருவரை விடுவித்துவிட்டு, மற்றவர்களை விடுவிக்க முடியாது எனக் கூற முடியாது" என்கிறார் நளினி, முருகன், சாந்தன் ஆகியோரின் வழக்கறிஞரான புகழேந்தி.

ஆனால், தமிழ்நாடு அரசு தானாக ஆறு பேரையும் விடுவிக்கவில்லையென்றால் அவர்களது நிலை என்ன? "சட்டத்தின் முன்பாக அனைவருமே சமம். ஆகவே, சட்டரீதியாக நிவாரணமளிக்கப்பட்ட ஏழு பேரில் ஒருவர் விடுவிக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டி அரசியல் சாசனத்தின் பிரிவு 14ன்படி மற்ற ஆறு பேரும் உயர் நீதிமன்றத்தையோ, உச்ச நீதிமன்றத்தையோ அணுக முடியும்.

அந்த நிலைக்கு அவர்களைத் தள்ளாமல் தமிழ்நாடு அரசே அவர்களை விடுவிக்குமென நம்புகிறோம்," என்கிறார் புகழேந்தி.

ஆனால், சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி ஹரி பரந்தாமன் வேறு விதமான கருத்தை முன்வைக்கிறார்.

"உச்ச நீதிமன்றம் அளித்திருக்கும் தீர்ப்பு மிக விரிவான பொருளைப் பேசுகிறது. ஆளுநர், குடியரசுத் தலைவர் ஆகியோரின் அதிகாரங்களை வரையறுக்கிறது. ஏழு பேரையும் விடுவிக்க மாநில அமைச்சரவை முடிவெடுத்த பிறகும், ஆளுநர் செயற்பட்ட விதத்தை இது கேள்வி கேட்கிறது. ஆளுநர் பேரறிவாளன் விவகாரத்தில் முடிவெடுக்காததால், உச்ச நீதிமன்றமே முடிவெடுத்திருக்கிறது.

ஆனால், மாநில அமைச்சரவை ஏழு பேரையுமே விடுவிக்கத்தான் பரிந்துரை செய்திருக்கிறது என்பதால், தற்போது ஆளுநர் அந்தப் பரிந்துரையை ஏற்க வேண்டும். இனியும் தாமதம் செய்ய முடியாது. ஏனென்றால், அந்தத் தாமதத்தையும் கேள்வியெழுப்ப முடியுமென நீதிமன்றம் கூறிவிட்டது.

மேலும், ஆளுநர், குடியரசுத் தலைவர் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவைக்குக் கட்டுப்பட்டவர்கள் என்பதையும் தீர்ப்பில் நீதிமன்றம் கூறியிருக்கிறது. ஆகவே, ஆளுநர் மாநில அமைச்சரவையின் பரிந்துரையில் உடனடியாகக் கையெழுத்திட வேண்டும். அதுதான் அவர் முன்பாக உள்ள ஒரே வாய்ப்பு. அப்படி அவர் கையெழுத்திட்ட பிறகு, ஆறு பேரையும் மாநில அரசு விடுவிக்கலாம்" என்கிறார் ஹரி பரந்தாமன்.

மாநில அரசைப் பொறுத்தவரை, இந்த விவகாரத்தில் உள்ள பல்வேறு வாய்ப்புகளை ஆராய்ந்து வருகிறது. தற்போது உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை வைத்தே விடுவிப்பது அல்லது ஆளுநரின் ஒப்புதலைப் பெற்று விடுவிப்பது அல்லது இந்த ஆறு பேரின் சார்பில் மீண்டும் நீதிமன்றத்தை அணுகி ஒப்புதலைப் பெறுவது ஆகிய வாய்ப்புகளே மாநில அரசின் முன்பாக இருக்கின்றன. அடுத்த சில நாட்களில் ஆளுநரும் சரி, மாநில அரசும் சரி ஒரு முடிவை எடுத்தாக வேண்டும்.

**(நன்றி: பி.பி.சி. தமிழ்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாவசிய...

பது தொடர்பான சுற்றறிக்கை பொது நிர்வாக அமைச்சின் செயலரால் இன்று வெளியிடப்படவுள்ளது.

எரிபொருள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் இது தொடர்பான சுற்றறிக்கையை பொது நிர்வாக அமைச்சின் செயலர் வெளியிடவுள்ளார்.

சேவைக்கு அழைக்கப்பட வேண்டிய அத்தியாவசிய உத்தியோகத்தர்கள் தொடர்பான முடிவை எடுக்கும் அதிகாரத்தை நிறுவனத் தலைவருக்கு வழங்குவது உள்ளிட்ட அறிவுறுத்தல்களும், வீட்டிலிருந்து பணியாற்றுவது தொடர்பான அறிவுறுத்தல்களும் இதில் அடங்கியிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ஒ-5)

## ஒவ்வொரு...

தமிழக அரசின் நன்கொடையின் முதற்கட்ட உதவிகள் இலங்கையை நேற்று முன்தினம் வந்தடைந்துள்ளன. அதில் 9 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி, 50 மெற்றிக் தொன் பால்மா, 25 மெற்றிக் தொன் மருந்து என்பன உள்ளன. இவற்றில் அரிசி மற்றும் பால்மா என்பனவற்றை 25 மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிப்பது தொடர்பான கலந்துரையாடல் பிரதமரின் செயலர் தலைமையில் நேற்று மாலை 'சூம்' தொழில் நுட்பத்தின் ஊடாக மாவட்டச் செயலர்களுடன் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் செந்தில் தொண்டமான், உணவுப் பாதுகாப்பு ஆணையாளர் திருமதி கிருஸ்ணமூர்த்தி ஆகியோரும் பங்கேற்றனர்.

நிதி அமைச்சு 25 மாவட்டச் செயலர்களுக்கும் முன்னர் அனுப்பிய கடிதத்தில், வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு தலா 20 கிலோ அரிசி வீதம் வழங்கப் பணித்திருந்தது.

ஆனால், நேற்றைய கலந்துரையாடலில் அந்த முடிவு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அனைத்து மக்களுக்கும் ஏதோவொரு வகையில் அரிசிக்கான தட்டுப்பாட்டை எதிர்கொள்வதால் ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 10 கிலோ வீதம் அரிசியை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்றுள்ள 9 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை பங்கிட்டு முன்னுரிமை அடிப்படையில் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு விநியோகிக்கப்படவுள்ளன. எஞ்சிய 31 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியும் இலங்கைக்கு அடுத்த மாதம் முற்பகுதியில் வரலாம் என்று எதிர்பார்க்கப்படுவதால் அதனை எஞ்சியுள்ள குடும்பங்களுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு பால்மா பைக்கெற்றுக்களை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதிலும் தற்போது முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்படும் குடும்பங்களுக்கே வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனை குடும்பங்களுக்கு அரிசி, பால்மா வழங்குவது என்பது தொடர்பான இறுதி முடிவு இன்று எடுக்கப்படும் என உணவுப் பாதுகாப்பு ஆணையாளர் திருமதி கிருஸ்ணமூர்த்தி, 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

இறுதி முடிவு எடுக்கப்பட்டதும் மாவட்டங்களுக்கான விநியோகம் உடனடியாக ஆரம்பிக்கப்படும். யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடபகுதிக்கான விநியோகம் ரயில் மார்க்கம் ஊடாக இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, இந்தப் பொதிகளை ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்து, அதனை ஏற்றி இறக்குவதற்கான கூலி என்பனவற்றுக்கான செலவுகளை அந்தந்த மாவட்டச் செயலகங்களே பொறுப்பேற்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தால் எந்தவொரு நிதியுதவியும் அதற்கு வழங்கப்படாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மாவட்டச் செயலகங்கள், நன்கொடையாளர்களின் உதவிகளை நாடுவதற்கு முடிவு செய்துள்ளன. (அ-ஒ-5)

## கட்சித்தலைவர்களின்...

அரசமைப்பின் 21ஆவது திருத்தச்சட்ட வரைவைக் கையாள்வதற்காக நியமிக்கப்பட்ட குழு நேற்றுக் காலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடியது. இதன்போது நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவால் தயாரிக்கப்பட்டுள்ள 21ஆவது திருத்தச்சட்ட வரைவு குறித்து விரிவாக ஆராயப்பட்டு, அதனை அமைச்சரவையில் முன்வைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி, அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நேற்றுமாலை கூடியபோது, உத்தேச 21 ஆவது திருத்தச்சட்டவரைவு, நீதி அமைச்சரால் முன்வைக்கப்பட்டது. இதன்போது, 21 ஆவது திருத்தச்சட்ட வரைவை நிறைவேற்றிக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய உத்தேச சட்டவரைவு, நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்குள், கட்சிகளின் யோசனைகள் உள்வாங்கப்படும்.

அதன்பின்னர், திருத்தப்பட்ட 21 ஆவது திருத்தச்சட்ட வரைவு, அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு, ஒப்புதல் பெறப்படும்.

இரட்டை குடியுரிமை கொண்டவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிப்பதற்கு தடை விதிக்கும் யோசனையும் உத்தேச சட்டவரைவில் உள்வாங்கப்பட்டுள்ளது. மத்திய வங்கி ஆளுநரின் நியமனம், அரசமைப்பு பேரவை ஊடாகவே மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. முன்னர் நடைமுறையிலிருந்த 19 ஆவது திருத்தச் சட்டத்தின் பல விடயங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (அ-ஒ-44)

## தாக்குதலை...

ஜகத் அல்விஸ் தனது பதவியைத்துறக்க முன்னர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு (சி.ஐ.டி.) வழங்கிய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்திலிருந்து, மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸுக்கு பதவியை இராஜினாமா செய்யுமாறு கோரப்பட்டிருந்தமைக்கு அமைய அவர் பதவி விலகியுள்ளார்.

அதற்கு முன்னதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகி 4 மணி நேரம் அவர் வாக்குமூலம் வழங்கினார்.

கொழும்பில் தாக்குதல் நடத்திய மஹிந்த ஆதரவுக் குண்டர்களுக்கு எதிராக நடவடிக்[கை எடுக்காமல் ஜகத் அல்]விஸ் பொலி[ஸ் மா அதிபருடன்] கைகோர்த்து தடுத்தாரென அமைச்சர் ரமேஷ் பத்திரண அண்மையில் குற்றஞ்சுமத்தியிருந்தார். அதேவேளை, ஆர்ப்பாட்டங்களைத் தடைசெய்யக் கோரும் பொலிஸாரின் மனு மீது நீதிமன்றங்களின் அவதானத்தைக் கோரும் வகையில் பிரதம நீதியரசருக்கு அவர் அனுப்பிய கடிதமும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையிலேயே அவர் வாக்குமூலம் வழங்கிய பின்னர் பதவி விலகியுள்ளார்.

### வாக்குமூலம்

மேல் மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கடந்த 17ஆம் திகதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட போது, அவர் வழங்கிய வாக்கு மூலத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்களை மையப்படுத்தி விசாரணைகள் நேற்று இடம்பெற்றுள்ளன.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் மற்றும் பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கு அமையவே, "கோத்தா கோ கம" மீது தாக்குதல் நடத்த வந்தவர்களை தடுக்காமல் இருந்ததாக தேசபந்து தென்னக்கோன் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு வழங்கிய வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார் என்று அறியமுடிகிறது. எனினும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று வாக்குமூலம் அளித்துள்ள ஜகத் அல்விஸ், தான் செயலர் என்ற ரீதியில் நிர்வாக ரீதியிலான விடயங்கள் தொடர்பான அதிகாரங்கள் மட்டுமே உள்ளதாகவும், எந்தக் கட்டளைகளையும் தான் பிறப்பிக்கவில்லை என்றும் தெரிவித்தாரென குற்றப்புலனாய்வுத் திணைக்கள வட்டாரங்கள் தகவல்கள் தெரிவித்தன.

'எனக்கு பல அழைப்புக்கள் தேசபந்து தென்னக்கோனிடம் இருந்து வந்திருந்தன. அதன்படியே ஒரு அழைப்புக்கு பதிலளித்தேன். அப்போது, காலிமுகத்திடலை நோக்கி ஆர்ப்பாட்டக்காரர்கள் செல்கிறார்கள் எனவும், எனினும் அவர்களை வேறு பாதைக்கு மாற்றி விட்டதாகவும் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார். "மைனா கோ கம" மீதோ அல்லது "கோத்தா கோ கம" மீதோ தாக்குதல் நடத்தியதைக்கூட அவர் கூறவில்லை. அத்தோடு, எந்தவொரு தாக்குதலையும் தடுக்க வேண்டாம் என ஒருபோதும் நான் அவருக்கு ஆலோசனை வழங்கவுமில்லை. அதற்கான அதிகாரமும் எனக்கில்லை - என்று ஜகத் அல்விஸ் கூறினார் என்று சி.ஐ.டி. தகவல்கள் தெரிவித்தன. (அ-ஒ-இ)

## நெருக்கடிகள்...

நாடு மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், அடுத்த வாரமளவில் அத்தியாவசிப் பொருள்களுக்கான நெருக்கடியை ஒப்பீட்டளவில் குறைப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

3 மாதங்களுக்கு முன்னதாக சர்வதேச நாணய நிதியத்தை நாடியிருந்தால் அவசியமான உதவிகளை இலகுவாகப் பெற்றிருக்கமுடியும். ஆனால், வெளிநாட்டுக் கையிருப்புக்குப் பற்றாக்குறை ஏற்பட்டதன் பின்னர் பேச்சு ஆரம்பிக்கப்பட்டதால் உதவிகளைப் பெறுவது கடினமான செயன்முறையாக மாறியுள்ளது.

உதவிகளைப் பெறுவதற்கு உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி ஆகியவற்றுடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பரிஸ் கிளப் உறுப்பு நாடுகள் மற்றும் பரிஸ் கிளப்பில் அங்கம் வகிக்காத இந்தியா, சீனா போன்ற நாடுகளுடனும் பேச்சு நடத்தத் தீர்மானித்துள்ளோம் - என்றார். (அ-ஒ-இ)

## சி.ஐ.டி....

வின் கோரிக்கைக்கு அமைவாக அவர் இடமாற்றப்பட்டுள்ளாரெனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதானி திலகரத்ன தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் உள்ள நிலையிலும், அவர் ராஜபக்சக்களுக்கு பக்கச் சார்பானவர் எனும் கருத்து பரவலாக பொலிஸ் திணைக்களத்தில் உலா வரும் நிலையிலும், தனது இடமாற்றக் கோரிக்கை கடிதத்தை பொலிஸ்மா அதிபருக்கு திலகரத்ன அனுப்பி வைத்திருந்தார். அதற்கு அமைவாகவே அவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

திலகரத்ன, மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது, அவரின் பிரதான பாதுகாப்பு அதிகாரியாக பல வருடங்களாகப் பணியாற்றியவர். 2019ஆம் ஆண்டு கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியானதும் அவர், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். பின்னர் அங்கிருந்து மாற்றப்பட்டு பிரதிப் பொலிஸ் மா அதிபராகத் தரமுயர்த்தப்பட்டு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதானியாக நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில், "மைனா கோ கம" மற்றும் "கோத்தா கோ கம" மீதான தாக்குதல் குறித்த விசாரணைகள் பொலிஸ் மா அதிபரால் பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலகரத்னவிடமே கையளிக்கப்பட்டது.

மஹிந்த ராஜபக்ச இந்த விவகாரத்தில் ஒரு சந்தேகநபராக கருதப்படல் வேண்டும் என பரவலான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், திலகரத்னவின் கீழ் அந்த விசாரணைகள் நியாயமாக நடக்குமா எனவும் பல அமைப்புக்கள் சந்தேகம் எழுப்பி சட்டமா அதிபருக்கும், பொலிஸ் மா அதிபருக்கும் முறையிட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## எரிபொருள்...

பலாலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் டீசல் மற்றும் பெற்றோலை பதுக்கி வைத்து சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்வதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட சோதனையில் 73.5 லீற்றர் பெற்றோலையும், 96.5 லீற்றர் டீசலையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். சந்தேகத்தில் தெல்லிப்பழையைச் சேர்ந்த 30 வயதான இளைஞனையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். (அ-ஒ-125)

## 2 எரிவாயு...

இரண்டு எரிவாயு கப்பல்களுக்கான 6.5 மில்லியன் அமெரிக்க டொலர் கொடுப்பனவு நேற்று செலுத்தப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

குறித்த கப்பல்கள் மூலம் 7 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எரிவாயு நாட்டுக்கு கொண்டுவரப்படவுள்ளது.

முதலாவது கப்பல் 3 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எரிவாயுவுடன் நாளை மறுதினம் வியாழக்கிழமை நாட்டை வந்தடையவுள்ளது.

இதேவேளை சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இன்று விநியோகிக்கப்படமாட்டாது என்பதால், வரிசைகளில் காத்திருக்க வேண்டாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிழைகளை உணராதவரையில் நாட்டுக்கு விமோசனம் இல்லை

## பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மே 24**

**யாழ்ப்பாணத்தின் அரைவாசி நிலப்பரப்பைக் கொண்ட சிங்கப்பூர் பொருளாதாரத்தில் முன்னேறியுள்ளது. நாம் எங்கே பிழைவிட்டோம் என்பதை உணர்ந்து திருந்தாதவரை இலங்கை பொருளாதாரத்தில் முன்னேற முடியாது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.**

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் அரசசார்பற்ற நிறுவனமான சொண்ட் நிறுவனம் ஏற்பாடு செய்த 'புதிய ஆட்சி மாற்றத்தில் மக்களின் பங்களிப்பு' என்ற தொனிப்பொருளிலான கருத்தரங்கில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் பொருளாதாரம் சிறந்த முறையில் கட்டியெழுப்பப்பட்டு வந்த நிலையில், எங்கு? எப்படி? பிழைத்தது என்பதுதான் இப்போதுள்ள கேள்வியாகவுள்ளது. வருமானத்துக்கு அதிகமான வாழ்க்கைத் தரத்துடன் வாழ முடியாது. அது வீடாக இருந்தாலும் சரி, நாடாக இருந்தாலும் சரி, தனிமனிதனாக இருந்தாலும் சரி.

265 சதுர மைல் பரப்பளவைக் கொண்ட சிங்கப்பூரில் 44 லட்சம் மக்கள் வாழ்கின்றனர். 440 சதுர மைல் பரப்பளவைக் கொண்ட யாழ்ப்பாணக் குடாநாட்டில் 6 லட்சம்பேரே வாழ்கின்றனர். அப்போதைய சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் இலங்கைக்கு வரும் போது இலங்கையைப் போல சிங்கப்பூரை மாற்றவேண்டும் என்று கூறியிருந்தார். அதன் பின்னர் சிங்கப்பூர் வீறு கொண்டு எழுந்துவிட்டது. இலங்கை பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

ஆசிய நாட்டில் மிகப்பெரிய பொருளாதாரத்தைக் கொண்டு குறுகிய காலத்தில் வளர்ந்து வருகிற நாடாக இந்தியாவைக் கூற முடியும். இந்தியாவின் பெரும் பொருளாதாரத்துக்கு தமிழ்நாடு பெரும் பங்களிப்பைச் செய்து வருகின்றது. அதற்கு தமிழ்நாட்டின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் கொள்கையே காரணமாக அமைகிறது.

இலங்கையில் வறுமையைப் போக்க என சமுர்த்தி நிவாரணத்தை கொண்டு வந்தார்கள் வறுமை போய்விட்டதா? சமுர்த்தி பெறுபவர்களில் பலர் வருமானம் உள்ளவர்களாகவே உள்ளனர். நாட்டுக்குக் கிடைக்கின்ற வெளிநாட்டு வருமானங்களை சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தி அதனை உரிய முறையில் செலவு செய்யும் போதே நாடு சிறந்த பொருளாதாரத்தை எட்ட முடியும் - என்றார். (எ-20)

# தென்னக்கோனை இடமாற்ற பரிந்துரை

கொழும்பு, மே 24

மேல்மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை இடமாற்றம் செய்யுமாறும் சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

காலிமுகத்திடலில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளில், தேவையற்ற தலையீடு களைத் தவிர்ப்பதற்காக சட்டமா அதிபர் சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். அதற்கமைவாக இடமாற்றப் பணிப்புரையை விடுத்துள்ளார்

(க-இ)

**சமையலாள் தேவை**

யாழ். நகரில் தனியார் நிறுவனம் ஒன்றில் தனிநபர் ஒருவருக்கு சமையல் செய்யக் கூடிய ஒருவர் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
**பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

**070 356 7811**

**இணையத்தளம் (Website) வேண்டுமா?**

உங்கள் எதிர்கால வணிகத்துகான இணையத்தளத்தை (website) உருவாக்குவதற்கு எம்மை நாடவும். May 30 வரை 30% கழிவு வழங்கப்படும்.

**072 439 5823**

# டெங்கு வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரியில் சிரமதானம்!

சாவகச்சேரி, மே 24

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட இடங்களில் கடந்த 21ஆம், 22ஆம் திகதிகளில் சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் மீசாலை வடக்கு, மேற்கு, மிருசுவில் வடக்கு ஆகிய இடங்களில் உள்ள வீடுகளுக்குச் சென்று களத்தரிசிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை டெங்கு வாரத்தின் இறுதி இரு தினங்களும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட இடங்களில் உள்ள பாடசாலைகள், பொது அமைப்புகள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் கட்டட நிர்மாணத்தளங் கள் போன்ற இடங்களிலும் சிரமதானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மூன்று தினங்கள் நடைபெற்ற டெங்குப் பரிசோதனையில், 945 இடங்களில் தரிசிப்புகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றில் டெங்கு காணப்பட்ட 80 இடங்களைத் துப்புரவு செய்ய இரு வார கால அவகாசம் வழங்கப்பட்டு சிவப்பு அறிவித்தல் ஒட்டப்பட்டது.

சுகாதாரப் பகுதியினருடன் பொலிஸார், படையினர், உள்ளூராட்சி சபையினர், பிரதேச செயலகத்தினர், கிராமமட்ட சுகா தாரக் குழுவினர், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிரமதானப் பணிகளை முன்னெடுத்தனர். (ம-14,9)

# தீவிரமாகின்றது குரங்கு அம்மை; மருத்துவர்களுக்கு தெளிவூட்டல்

கொழும்பு, மே 24

உலகின் பல நாடுகளில் பரவிவரும் குரங்கு அம்மை தொடர்பில், இலங்கை மருத்துவர்களுக்கும் தெளிவூட்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கைக்குள் இந்த நோய் பரவுவதைத் தடுக்கும் நோக்கில், தொற்றுடைய வெளிநாட்டவர்களை அடையாளம் காண, விமான நிலையத் தரப்பினருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, விமான நிலையத்தில் குரங்கு அம்மை தொற்றுடைய நோயாளர்களை இனங்கண்டு, அவர்களைத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் பிரதானியான மருத்துவர் சமித கினிகே தெரிவித்துள்ளார்.

இந்த நோய் பரவும் தன்மை, கொரோனா பரவல் வேகத்துடன் ஒப்பிடுகையில், குறைந்த மட்டத்தில் உள்ளது. மிகவும் நெருங்கிய தொடர்பைப் பேணும் நபர்களுக்கு இடையே இந்த நோய் இலகுவாகப் பரவும். கொரோனாத் தொற்றைக் கண்டறிவதற்கு பயன்படுத்தப்பட்டதைப் போன்ற உயிரியல் மாதிரி ஆய்வு முறைமையின் ஊடாக இந்த நோயைக் கண்டறிய முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# குடும்பஸ்தர் மீது கம்பியால் தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 24

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் கல்லைவேம்படிப் பகுதியில் 47 வயதான குடும்பஸ்தர் மீது கம்பியால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சுழிபுரம், கல்லை வேம்படிப் பகுதியில் இளைஞர் ஒருவருக்கும் மேற்படி குடும்பஸ்தருக்கும் இடையே நேற்றுமுன்தினம் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில் நேற்று குடும்பஸ்தர் கடைக்கு சென்றபோது முரண்பட்ட இளைஞர் கம்பியால் தாக்கிவிட்டு தப்பிச்சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ஒ-125)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 18 பரப்புக் காணிவிற்பனைக்கு.

✓இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
✓கைதடி சித்த போதனா வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடம் கிழக்கு எல்லைகள்
✓சமுர்த்தி வங்கி வடக்கு எல்லை.
✓கைதடி சந்தி **200 M** தூரம்
✓வட மாகாண சபை அலுவலகம் 250 மீற்றர் தூரம்.
✓மூன்று வழி பாதையுடன்
01- A-09 வீதி 100 மீற்றர் (16 அடி பாதையுடன்)
02- கைதடி கோப்பாய் வீதி 50 மீற்றர் தூரம் (20 அடி பாதையுடன்)
03- சமுர்த்தி வங்கி அருகாமை **100 M** தூரம் (16 அடி பாதையுடன்)
✓சுற்றி நல்ல சூழலுடன் நல்ல தண்ணீர் நிலம்
✓செம்மண் காணி.

தொடர்பு: **077 6234 204**
**077 2880 152**
**076 6583 621**

(CS 19742) 1/6

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில்**
**16 பரப்பு காணி விற்பனைக்குண்டு**

**நிலப்பரப்பு**

❖ A 32, A9 இணையும் பிரதான வீதியில் (றவுண்டப் வோட் )
❖ A9 வீதியுடன் 6 பரப்பும்.
❖ A9 பிரதான வீதியில் இருந்து 18அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
❖ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
❖ திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும்
❖ மருந்தகங்கள் அமைப்பதற்கும் (பார்மசி)
❖ அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம் :**
**காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை**
தரகர் தேவையில்லை

**தொடர்புகளுக்கு : ஜெயம்**
**077 814 7389, 077 241 7589**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.